Vel Arch வாழ்க பெரியார்! Vel Arch வளர்க அவர்தம் கொள்கை! Vel Arch

விடுதலை

VIDUTHALAI

தோற்றம்: 1935

82 உலகின் ஒரே பகுத்தறிவு நாளேடு

பெரியாராண்டு 138 • மலர் 82 இதழ் 210 • பக்கங்கள் 8 • தனி இதழ் நன்கொடை ரூ • ளியூர்: வெள்ளி 30.12.2016 • சென்னைப் பதிப்பு www.viduthalai.in

கல்லக்குறிச்சியில் எழுச்சியுடன் நடைபெற்ற... 4

உலகின் நீளமான புல்லட் ரயில் வழித்தடம் 6

அறிவியல் அரங்கம் 7

அய்யாவின் அடிச்சுவட்டில்... 5ஆம் பாகம் நூல் அறிமுகம்! 8

மாநில அரசின் அனுமதியின்றி தலைமைச் செயலகத்துக்குள் துணை ராணுவம் நுழையலாமா?

இது அச்சுறுத்தல், அரசியல் உள்நோக்கம் கொண்டது என்ற விமர்சனத்துக்கு என்ன பதில்?

மாநில அரசின் அனுமதியின்றி தமிழக அரசின் தலைமை செயலகத்துக்குள் துணை ராணுவம் நுழையலாமா? இது அச்சுறுத்தல் அரசியல் உள்நோக்கம் கொண்டது என்ற விமர்சனத்துக்கு என்ன பதில்? என திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள முக்கிய அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் குறிப்பாக 2016இல்கூட பல தொழிலதிபர்கள், கல்வி நிறுவன முதலாளிகள், சினிமாத்துறையினர் - இப்படி பலபேரிடம் வருமான வரித்துறை 'ரெய்டுகள்' நடந்துள்ளன!

ஆனால், கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் சென்னை அண்ணா நகரிலும், சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள தமிழக அரசின் தலைமைச் செயலர் அறையிலும் நடைபெற்ற வருமான வரித்துறை சோதனையும், அதில் பின்பற்ற வேண்டிய நடைமுறையும் பொதுவான பலரின் கேள்விக்கும், விமர்சனத்திற்கும் ஆளாகியுள்ளன!

அரசியல் அச்சுறுத்தல்

இதில் அரசியல் அச்சுறுத்தல் என்ற உள்நோக்கம் இருக்குமோ என்றெல்லாம் செய்தி ஊடகங்களிலும், தொலைக்காட்சிகளிலும் விவாதங்களும், ஆய்வுக் கட்டுரைகளும் வந்த வண்ணம் உள்ளன! தேவையா இது?

சந்தேகப்படும்படியாக ஏதேனும் தகவலோ, செய்திகளோ, வருமான வரித்துறை பெரிய அதிகாரிகளுக்குக் கிடைத்தால், அவர்கள் அந்த நபர்கள் வீட்டில் சோதனை நடத்திடுவதை யாரும் குறைகூறவோ, தவறு என்றோ, அரசியல் சார்ந்த நடவடிக்கை என்றோ கூறிடுவதில்லை; கூறிடவும் முடியாது!

அதற்கென கடமையாற்றும் வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்போ, குரோதங்களோ இருக்கிறது என்ற குற்றச்சாட்டும் எழுவதில்லை.

தமிழர் தலைவர் ஆசிரியர் எழுப்பும் வினா

ஆனால், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக இருந்த திரு.ராமமோகனராவ் அவர்கள் வீட்டில் நடைபெற்ற வருமான வரி ரெய்டும், அதன் தொடர்ச்சியாக சென்னை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளரின் அறைக்குள் நுழைந்து - அதுவும் மத்திய அரசின் துணை ராணுவத்தின் பாதுகாப்போடு நடந்தது என்பதுதான் இப்போது **பொதுவானவர்களையும் நியாயமான கேள்விகளைக் கேட்க வைத்துள்ளது.**

திரு. ராமமோகனராவின் ஆத்திரம் பொங்கிய பேட்டியில் அவர் கூறியதை ஏற்காதவர்கள் ("நான் புரட்சித்தலைவியால் பயிற்சி கொடுக்கப்பட்டவன், இன்னமும் நான்தான் தலைமைச் செயலாளராக இருக்கின்றவன்" என்பது போன்ற அதீதப் பேச்சுகள்- தேவையற்றவையாகும்) பலரும்கூட, அவர் எழுப்பிய சில சட்டபூர்வமான கேள்விகளைப் புறந்தள்ள முடியாததினால்தான், மிக மூத்த, பல ஆண்டுகளுக்கு முன்பே இந்திய ஆட்சிப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற 90ஆண்டு நீண்ட வாழ்வில் உள்ள மரியாதைக்குரிய **திரு. பி.எஸ்.இராகவன் அவர்கள்** தூய எண்ணத்துடன் இன்று 'தமிழ் இந்து' நாளேட்டில் எழுப்பியுள்ள சட்டபூர்வமான - அனுபவமிக்க பக்குவத்தோடு எழுதியுள்ள கட்டுரையில் கேட்டுள்ள சில கேள்விகளுக்கு வருமான வரித்துறை - நிதித்துறை - மத்திய அரசு மூலம் சரியான பதில் கிடைக்க வேண்டும்.

"ராம மோகனராவின் மூன்று வாதங்கள் நியாயமானவை என்று எனக்குப்படுகிறது. முதலாவது, சோதனை அனுமதிக் கடிதத்தில் தன் பெயரில்லை. தன்னுடைய மகனின் பெயர்தான் இருந்தது என்றும், வருமான வரித்துறை சோதனைக்கு வந்தவர்கள் துணை ராணுவப்படையினருடன் தன் வீட்டிற்குள் நுழைந்து சோதனையிட்டது பலாத்காரமான செயல்" என்று அவர் கூறியுள்ளார்.

ராமமோகனராவ் மகன் (விவேக்) வேறு முகவரியில் உள்ளபோது, ராமமோகனராவ் வீட்டுக்கு வலுக்கட்டாயமாகச் சென்றது சரியில்லை என்ற கருத்தை திரு பி.எஸ்.ராகவன் கூறுவது நியாயமானது-அனுபவபூர்வமாக அதை விளக்கியுள்ளார்கள்.

இரண்டாவது, ராமமோகனராவ் வீட்டில் ரூபாய் 30 லட்சம் புது நோட்டுகள், 100க்கும் அதிகமாக கிலோ கணக்கில் தங்க, வெள்ளிப் பொருள்களையும் கைப்பற்றியதுபோன்ற தோற்றமுள்ள தகவல்கள் ஊடகங்களில், வருமான வரித்துறை அதிகாரிகள் கூறியதாக வெளியாயின.

ஆனால், ராமமோகனராவோ, ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 320 ரூபாய் ரொக்கம், மனைவி, மகளின் 40, 50 சவரன்கள், விநாயகன், லட்சுமி, வெங்கடேசுவரா உள்பட 20-25 கிலோ எடையுள்ள வெள்ளிப் பொருள்கள்தான் கைப்பற்றப்பட்டன என்கிறார்.

எனவே, **"சோதனையின் அடிப்படையே சந்தேகத்துக்கு உரியதாகி விடுகின்றது" என்கிறார் திரு. ராகவன் அவர்கள்.**

மூன்றாவது, **தலைமைச் செயலகத்துக்குள்ளே நுழைந்து தலைமைச்செயலாளர் அறையில் அதுவும் துணை ராணுவத்துடன் (உள்ளூர் போலீஸ் பெரிய அதிகாரிகளின் அனுமதிகூட பெறாமல்) சென்றது எல்லை மீறிய செயல்** என்றும், தலைமைச் செயலாளர் அறையில் எத்தனையோ ரகசிய கோப்புகள் இருக்கும்; அதனை மூன்றாவது நபர் பார்க்க, படிக்கச் செய்ததில் அரசின் ரகசியத்தைப் பார்த்த குற்றத்துக்கு **ஏழு ஆண்டுகள் தண்டனை அந்த நபர்களுக்கு உண்டு** என்றும் கூறியுள்ளார் திரு. பி.எஸ். ராகவன்.

அரசியல் சட்ட விதிகள் மீறல்

இது வெறும் ராமமோகனராவுக்கும், வருமான வரித்துறைக்கும் இடையே நடக்கும் பிரச்சினை என்ற பரிமாணத்தைத் தாண்டி, **மாநில அரசின் உரிமைகளை, அரசியல் சட்ட விதிகளை மத்திய அரசு மீறிடும் அளவுக்கு மிக அசாதாரணப் பிரச்சினையாக மாறியுள்ளதே!**

மத்திய, மாநில அரசுகளின் உரிமைகள் அரசமைப்புச் சட்டப்படி வரையறுக்கப்பட்டவை.

மாநில அரசின் அனுமதியின்றி, துணை ராணுவம் நுழையலாமா?

இது அச்சுறுத்தல், அரசியல் உள்நோக்கம் கொண்டது என்ற கடும் விமர்சனத்துக்கும் இடம் தருவதாகாதா?

மத்தியில் உள்ள மோடி அரசு தமிழ்நாட்டு அரசினை இப்படி தங்களது ஆதிக்க, அதிகார வளையத்தில் நெருக்குவதா என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளனவே!

இது பெரியார் மண்

உறவுக்குக் கைகொடுக்கவும், உரிமைக்குக் குரல் கொடுக்கவும்தான் நம் மாநில அரசு, குறிப்பாக திராவிடர் இயக்க ஆட்சிகள் நடைபெற்றிட வேண்டும் என்பதே தமிழ்நாட்டு மக்களின் கருத்து. அதனால் கடந்த 50 ஆண்டுகளாக வேறு கட்சி **ஆட்சிகள் வர முடியாத நிலை**

இது பெரியார் மண். உரிமைக்குரலை நசுக்கி, ஆதிக்கம் செலுத்த ஒத்திகைகள் இனி வேண்டாம்.

சென்னை
29-12-2016

தலைவர்
திராவிடர் கழகம்

பிரபல அமெரிக்க 'போர்ப்ஸ்' பத்திரிகை கூறுவதென்ன?

ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்ற மோடியின் திட்டம் மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடிக்க போட்ட திட்டம்

வாஷிங்டன், டிச.29 பிரதமர் மோடியின் ரூபாய் ரத்து அறிவிப்பு என்பது மக்களின் சொத்துக்களை கொள்ளை யடிக்க போட்ட திட்டம், ஒழுக்கமற்ற செயல், கடந்த 1975 1977 ஆண்டுகளில் இந்திரா காந்தி கொண்டு வந்த அவசர நிலை காலத்தைப் போன்றது என்று அமெரிக்காவில் இருந்து வெளி வரும் "போர்ப்ஸ்" பத்திரிகை (26.12.2016) விமர்சித்துள்ளது.

போர்ப்ஸ், அமெரிக்காவில் இருந்து வெளி வரும் வணிகம் தொடர்பான பிரபல வார இதழ் ஆகும். இந்த இதழ் இந்தியாவில் 500 ரூபாய், 1000 ரூபாய் நோட்டுகள் ரத்து செய்யப்பட்டதை கடுமையாக விமர்சித்துள்ளது.

'போர்ப்ஸ்' பத்திரிகை ஆசிரியர் ஸ்டீவ் போர்ப்ஸ் அந்தப் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரை வருமாறு:

இந்திய அரசு முன் எப்போதும் இல்லாத வகையில் உயர்மதிப்பு கொண்ட ரூபாய் நோட்டுகளை ரத்து செய்து, நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்ததோடு மட்டும் அல்லாமல், ஏற்கனவே ஏழைகளாக இருக்கின்ற லட்சக்கணக்கான மக்களையும் கொடிய வறுமையில் தள்ளியுள்ளது.

இந்த நட வடிக்கை அந்த அப்பாவி மக்களை மூச்சடைக்க வைத்து, திக்கு முக்காடச் செய்யும் ஒழுக்கமற்ற செயலாகும்.

1000 கோடி டாலர் அளவிற்கு இழப்பைத் தரும்!

இந்த ரூபாய் நோட்டு தடை அறிவிப்பு என்பது, ஜன நாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப் பட்ட ஓர் அரசு எடுத்த அதிர்ச்சி தரக் கூடிய நடவடிக்கையாகும். இதன் மூலம் இந்திய அரசு, தன் நாட்டு மக்களின் சொத்து களை அபகரிக்கும் பொருட்டு மிகப்பெரிய திருட்டுச் செயலில் ஈடுபட்டுள்ளது. இந்த நட வடிக்கை இந்தியாவுக்கு 1000 கோடி டாலர் அளவுக்கு இழப்பை கொடுக்கும். (இது இந்திய மதிப்பில் சுமார் 68 ஆயிரம் கோடி ரூபாய்)

இந்திராகாந்தி ஆட்சிக் காலத்தில் அவசர நிலை கொண்டு வரப்பட்டது. அதற்குச் சமமாக தற் போதைய மோடி அரசின் ரூபாய் நோட்டு ரத்து திட்டம் இருக்கிறது.

இந்தத் திட்டம் ஊழலையும், வரி ஏய்ப்பையும், கள்ள நோட்டையும் ஒழிக்கும் என்றும், பயங்கரவாதச் செயல் களுக்கு நிதி செல்வதை குறைக்கும் என்றும் இந்திய அரசு கூறுகிறது; டிஜிட்டல் பணப் பரிவர்த் தனைக்கு மாற வேண்டும் என்றும் மக்களை வலியுறுத்துகிறது.

உச்சபட்ச அழிவுக்கு உதாரணம் இந்தியாதான்!

ஒரு நாட்டை பணத்தின் மீதே பற்றில்லாமல் செய்து, அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை கொண்டு வர நினைக்கும் ஒரு அரசின் உச்ச பட்ச, அழிவுக்குரிய உதாரணம் இந்தியாதான்.

கொஞ்சம் கூட நியாயமே இல்லா மல் நடந்து கொண்ட இந்தியாவைப் பார்த்து மேலும் சில நாடுகள் உயர் மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை ஒழிக்க தயாராகின்றன. நாட்டு மக் களின் அந்த ரங்கத்தில் அத்து மீறி தலையிடுவதும், தனி மனிதர்களின் வாழ்க்கையை அரசு ஆதிக்கம் செய்ய அதி காரத்தை திணிப்பதும்தான் இந்த நடவடிக்கை என்ற உண் மையான புரிதல் யாருக்கும் இல்லை.

மக்களின் சொத்துக்களை திருடி, இன்னும் கொடிய வறு மையில் தள்ளி, சமூக நம்பிக் கையை குறைத்து மதிப்பிட்டு, விஷமுள்ள அரசியல் மூலம், எதிர்கால முதலீடுகளை இந் தியா கெடுத்துக் கொண்டது.

இந்தியா உலக நாடுகளுக்கு மோசமான முன்னுதாரணம்!

இந்தியா நேர்மையற்ற முறையில், மக்களை தேவை யில்லாமல் வேதனைப்படுத்தி யுள்ளது. இந்த வகையில், இந்தியா உலகநாடுகளுக்கு மோச மான முன் உதாரணமாக மாறியுள்ளது. இந்தியாவின் பொருளா தாரம் என்பது ரொக்கப் பணிப் பரிமாற்றத்தை அடிப்படை யாகக் கொண்டது. நாட்டின் கடுமையான வரிகள், கெடுபிடி களால் தான் பெரும்பாலும் சட்டவிரோத பணப் பரிமாற்றங்கள் நடக் கின்றன. இந்திய அரசின் நிர்வாகம் என்பது கால தாமதத் துக்கும், சோம்பேறித்தனமான, மந்த மான, ஊழலுக்கு பெயர் போனது. ஆனால், மக்களை மட் டும் வலுக் கட்டாயமாக நேர் மையாக இருக்கக் கூறுகிறது.

ரூபாய் நோட்டை ஒழிப் பதனால் மட்டும் எல்லாம் மாறிவிடாது. இந்த உலகம் தொடங்கியதில் இருந்தே மனிதனின் சில குணங்கள் மாறாமலே உள்ளன. தப்பு செய்வதற்கு புதிய புதிய வழிகளை மனிதர்கள் கண்ட றிந்து கொண்டே இருப்பார் கள். ரூபாய் நோட்டு ரத்து செய் யப்பட்டதால் மட்டும் பயங்கர வாதிகள் திருந்தி விடப்போவ தில்லை. ஏழை மக்கள் அதிகம் வாழும் இந்தியாவில், பணம் இல்லா பொருளா தாரம் என்பது உடனடியாக சாத் தியம் இல்லை. வரிவிதிப்பு முறைகளை ஒரே சீராக்கி, அல் லது அனைத்து தரப்பின ரும் வரிசெலுத்தும் வகையில் குறைந்த வரி விதிப்பு செய்து, வரி ஏய்ப்பைத் தடுக்கலாம். வர்த்தகம், தொழில் செய் வதை எளிதாக்கினாலே, மக் கள் அவர்களாகவே பணமற்ற பொருளாதாரத்திற்கு மாறிவிடு கிறார்கள். உலகின் மிகப்பெரும் சக்தியாக மாற வேண்டும் என்ற ஆசை முழுமை யாக நிறைவேற வேண்டுமென்றால் இந்தியா கண்டிப்பாக சில விஷயங்களை செய்ய வேண் டியது இருக்கிறது.

வர்த்தகத்திற்கான வரிகளை யும், அரசின் வருவாயைக் குறைத்து, ஒட்டு மொத்த வரி முறையையும் எளிமைப்படுத்த வேண்டும். சுவிட்சர்லாந்தின் நாணயத்தை விடவும் வலி மையானதாக ரூபாயை மாற்ற வேண்டும். அடிப்படைக் கட்டுமானத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

இதெல்லாம் நடக்கும்போது இந்தியா உலகின் மிகப்பெரும் சக்தி யாக மாறும்.

இவ்வாறு அந்தக் கட்டு ரையில் கூறப்பட்டுள்ளது.

சசிகலாவிடம் கட்சித் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்து அதிமுக பொதுக்குழு தீர்மானம்

சென்னை, டிச.29 அதிமுக தலைமைப் பொறுப்பு வி.கே.சசிகலாவிடம் ஒப் படைக்கப்படுவதாக பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதிமுகவை சசிகலா வழிநடத்து வது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், 'ஜெயலலிதா மறைந்த நிலையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காப்பாற்றவும், வழி நடத்தவும், அஇஅதிமுக பொதுச் செயலாளர் நியமனத்துக்கு பொதுக்குழுவின் ஒப்புதல்' எனதெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக, அதிமுக பொதுச் செயலாளராக வி.கே.சசிகலா நியமிக்கப்பட்டிருப்பதாக, தமிழக முதல்வரும் அதிமுக பொருளாளரு மான ஓ.பன்னீர்செல்வம் தெரிவித் தார். முன்னதாக வி.கே.சசிகலாவிடம் தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப் படுவதற்கான தீர்மானம் முன் மொழி யப்பட்டது. சசிகலாவின் தலை மைக்கு விசுவாசத்துடன் பணியாற்ற பொதுக்குழு உறுதியேற்கிறது எனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டி ருந்தது. இதனை வழிமொழிந்து பொதுக்குழு உறுப்பினர்கள் இசைவு

தெரிவித்தனர்.

கூட்டத்தில், முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், அமைச் சர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டுள் ளனர். பொதுக்குழு கூடியதும் முன் னாள் முதல்வர் ஜெயலலிதா மறை வுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

அதிமுக பொதுக்குழு தீர்மானங்கள்:

★ முன்னாள் முதல்வர் ஜெய லலிதா மறைவுக்கு இரங்கல் தெரி வித்து தீர்மானம்.

★ சசிகலாவின் தலைமையின் கீழ் விசுவாசத்துடன் பணியாற்ற உறுதி ஏற்று தீர்மானம்.

★ முன்னாள் முதல்வர் ஜெயலலி தாவின் பிறந்தநாளை 'தேசிய விவசா யிகள் தினம்' என்று அறிவிக்கவும், நாடாளு மன்றத்தில் ஜெயலலிதாவின் வெண்கலச் சிலையை நிறுவ வும் மத்திய அரசுக்கு கோரிக் கை விடுத்து தீர்மானம்.

★ ஜெயலலிதாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க மத்திய அரசுக்கு கோரிக்கை முன் வைத்து தீர்மானம்.

★ ஜெயலலிதாவுக்கு மானுட சேவைக்கான பிலிப்பைன்ஸ் நாட்டின் ரமோன் மகசே விருது மற்றும் உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங் கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என தீர்மானம்.

★ எம்ஜிஆர் நூற்றாண்டினை மக்கள் பணி ஆண்டாக அனுசரிக்க தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்து தீர்மானம்.

★ ஒவ்வொரு ஆண்டும் முன்னாள் முதல்வர் ஜெய லலிதாவின் நினைவு தினத்தன்று அதிமுக தொண்டர்கள் ஒன்றுகூடி கழக ஒற்றுமைக்கு உறுதி யேற்பர்.

அதிமுக பொதுச்செயலாளராகவும் முதல்வராகவும் இருந்த ஜெயலலிதா கடந்த 5ஆம் தேதி காலமானார். இதையடுத்து, புதிய முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் பதவியேற்றார். அதிமுக பொதுச் செயலாளர் பதவி யாருக்கு என்ற கேள்வி எழுந்தது. ஜெயலலிதாவின் தோழி சசிகலாவை பொதுச் செயலாளராக பொறுப் பேற்கும்படி அமைச்சர்களும் அதிமுக நிர்வாகிகளும் வலியுறுத்தி வருகின் றனர். இது தொடர்பாக தீர்மானங்களை நிறைவேற்றி சசிகலாவிடம் அளித் துள்ளனர்.

இந்நிலையில் அதிமுகவின் பொதுக்குழு, செயற்குழுக் கூட்டம், சென்னையை அடுத்த வானகரத்தில் நடைபெற்றது. செயற்குழுவும் தொடர்ந்து பொதுக்குழுவும் கூடு கிறது. அவைத் தலைவர் இ.மதுசூ தனன் தலைமையில் நடக்கும் கூட் டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் 2,270 பேர், 280 செயற்குழு உறுப் பினர்கள் பங்கேற்றுள்ளனர்

தந்தை பெரியார் அறிவுரை

சேவை என்பது...

சேவை என்பது கூலியை உத்தேசித்தோ, தனது சுய நலத்தை உத்தேசித்தோ செய்வதல்ல. மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்கு ஆகவே செய்யப்படும் காரியம் தான் சேவை.

(குடிஅரசு, 17.11.1940)

நிறுவனர் : தந்தை பெரியார்

விடுதலை

வாழ்க பெரியார்! வளர்க அவர்தம் கொள்கை!!

சென்னை • வியாழன் • டிசம்பர் 29 - 2016

ஒலித்தது பெரியார் குரல் (3)

தந்தை பெரியார் 43ஆம் ஆண்டு நினைவு நாள் சிறப்புக் பொதுக் கூட்டம், சென்னைப் பெரியார் திடலில் கடந்த 24.12.2016 அன்று முற்பகல் நடைபெற்றது. அக்கூட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் மானமிகு தொல். திருமாவளவன் அவர்களும் பங்கேற்று குறைந்த நேரத்தில் நேர்த்தியான கருத்துகளை எடுத்துக் கூறினார். திராவிடம் என்பது ஒரு கட்சியைச் சார்ந்ததல்ல. ஒரு சித்தாந்தம், தத்துவக் கோட்பாடு. ஜாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, சமூகநீதி இவற்றின் குறியீடு என்பதை அழகாகப் பதிவு செய்தார். தந்தை பெரியார் இந்த குறியீடுகளின் ஒட்டு மொத்த அடையாளம் என்பது அவர்தம் கருத்தாக அமைந்திருந்தது.

அரசியலில் பல நேரங்களில் சமரசங்களுக்கு இடம் ஏற்படுகிறது. அரசியல் போக்கு, தேர்தல் என்பதெல்லாம் சலிப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

தேர்தல் அரசியலைப் புறக்கணித்து விட்டு, திராவிடர் கழகத் தொண்டனாகப் பணியாற்றலாம் என்று கூட சில நேரங்களில் நான் நினைப்பதுண்டு என்று எழுச்சித் தமிழர் மானமிகு தொல். திருமாவளவன் உணர்வுப் பூர்வமாக நெகிழ்ச்சியுடன் தன் கருத்துகளைப் பதிவு செய்தார்.

தொடர்ந்து பேசிய திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் மானமிகு கி. வீரமணி அவர்கள் சில முக்கிய மான கருத்துகளைப் பதிவு செய்தார்.

சகோதரர் திருமாவளவனுக்கும், எங்களுக்கும் இடையில் தேர்தல் நேரத்தில் இடைவெளி ஏற்பட்டதுண்டு. அதனால் எங்களின் உறவு பாதிக்கப்பட்டதாக நினைக்க வேண்டாம். அவர் எங்களின் சகோதரர். எங்களை யாரும், எந்த சக்தியும் பிரித்து விட முடியாது.

அவர் எடுத்த முடிவின் காரணமாக தேர்தலில் தோல்வியைக் கண்டிருக்கலாம். அதன் காரணமாக அவர் சோர்வடைந்து விடக் கூடாது என்பதற்காக தேர்தல் முடிவைத் தொடர்ந்து முதலாவதாக நான் அவரிடம் தொடர்பு கொண்டு தொலைபேசியில் பேசினேன் - தேர்தல் தோல்வியைக் கண்டு துவண்டு விடாதீர்கள் - சோர்வடைந்து விடாதீர்கள் - அரசியல் ஒரு பரமப்பத விளையாட்டுப் போன்றது. அந்தப் பாம்பு மேலே ஏறும், பிறகு கீழே வந்து விடும் - இதெல்லாம் சர்வ சாதாரணம் என்று கூறினேன்.

இப்பொழுது சில பாம்புகள் உள்ளே புகுந்து கடிக்க லாம் என்று மனப்பால் குடிக்கலாம்; அதற்கு நாம் இடம் தந்து விடக் கூடாது, இதில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

இளைஞர்கள் அதிகமாக திராவிடர் கழகத்திலும், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பிலும் இருக்கிறார்கள். அந்த இளைஞர்களிடம் கட்டுப்பாட்டை உருவாக்கி வழி நடத்திட வேண்டும் என்று சகோதரர் திருமாவளவனைக் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்ட திராவிடர் கழகத் தலைவர் அவர்கள் அரசியலை விட்டு விலகி வருவதாகக் குறிப்பிட்டது குறித்தும் தன் கருத்தைப் பதிவு செய்தார்.

அவசரப்படாதீர்கள், அரசியலுக்குச் சென்று விட்ட பிறகு சிலவற்றில் உறுதியாக இருக்க வேண்டும். சந்தனம் இருக்க வேண்டிய இடத்தில் சாணங்கள் அமர்ந்து விடும். நீங்கள் அரசியலிலேயே தொடருங்கள் - உங்களுக்குரிய இடம் கிடைத்தே தீரும் - அதற்குக் கொள்கை ரீதியாக திராவிடர் கழகம் துணை நிற்கும் என்று தமிழர் தலைவர் சொன்ன சொற்கள் நிச்சயமாக எழுச்சித் தமிழருக்குப் பெரும் ஆறுதலையும், உற்சாகத்தையும், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் அளித்திருக்கும் என்பதில் அய்யமில்லை.

சகோதரர் திருமாவளவன் சொன்னதும், அதற்குத் திராவிடர் கழகத் தலைவர் தொடர்ந்து தெரிவித்த கருத்தும் 48 ஆண்டுகளுக்கு முன் தருமபுரி - நாகரசம்பட்டியில் நடந்த ஒரு விழாவையும், அவ்விழாவில் அறிஞர் அண்ணாவும், தந்தை பெரியாரும் தெரிவித்த கருத்துகளையும் தான் நினைவூட்டுகின்றன.

முதல் அமைச்சராக ஆன நிலையில் நாசரசம்பட்டியில் பெரியார் ராமசாமி உயர்நிலைப்பள்ளி தொடக்க விழாவில் பேசிய முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் தந்தை பெரியார் அவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு தன் எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

நான் முதல் அமைச்சராகப் பணியைத் தொடரவா அல்லது முன்பு தந்தை பெரியார் அவர்களோடு இணைந்து பட்டி தொட்டியெல்லாம் அலைந்து பகுத்தறிவு, சுயமரியாதை கருத்துகளைப் பரப்பும் பணியில் ஈடுபடுவதா என்பதை இந்த விழாவில் தந்தை பெரியார் அறிவிக்கட்டும். அதன்படி நடந்து கொள்ள நான் தயாராகவே இருக்கிறேன் என்று முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் அந்த விழாவில் பேசினார்.

முதல்வர் அண்ணாவைத் தொடர்ந்து உரையாற்றிய தந்தை பெரியார் அவர்கள் முதல் அமைச்சர் பதவியில் ஒரு நாளைக்கூட இழக்காமல் தொடர்ந்து அண்ணா அவர்கள் பணியாற்றிட வேண்டும், மற்றபடி சமுதாயப் பணிகளை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னார்.

இதில் நினைவூட்டத் தகுந்தது என்னவென்றால் அந்த விழாவுக்குத் தலைமை வகித்தவரே நமது ஆசிரியர் மானமிகு கி. வீரமணி அவர்கள்தான்.

டிசம்பர் 24ஆம் தேதி நடைபெற்ற தந்தை பெரியார் நினைவு நாளில் எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவன் அவர்கள் தெரிவித்த கருத்தும், அவரைத் தொடர்ந்து தமிழர் தலைவர் தெரிவித்த கருத்தும் நாகரசம்பட்டி பள்ளி விழாவில் வெளியிடப்பட்ட அதே கருத்துகளின் மறு பதிப்பாகவே இருந்தன என்பது இந்த இடத்தில் நினைத்துப் பார்த்து சிந்திக்கத் தக்கதாகும்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒருதாழ்த்தப்பட்டவரை உட்கார வைக்க வேண்டும் என்று கருதியவர் தந்தை பெரியார். அந்தக் கருத்தைச் செயல்படுத்திக் காட்டியவர் மானமிகு சுயமரியாதைக்காரரான முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

அதே நிலை - ஒரு கட்டத்தில் தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரத்திலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை அமர வைப்பது - திராவிடர் இயக்கத்தின் சித் தாந்தம்தான் - அதனைத்தான் அய்யா நினைவு நாள் சிறப்புக் கூட்டத்தில் கோடிட்டுக் காட்டினார் திராவிடர் கழகத் தலைவர்.

பறையன் பட்டம் போகாமல் சூத்திரப் பட்டம் போகாது என்று சொன்ன தலைவரின் நினைவு நாளில் இந்தக் கருத்து மிகவும் முக்கியமானதாகும். நாளைக்கே நடந்து விடும் என்பதல்ல - ஆனாலும் நடந்து தீர வேண்டும் என்ற தொலைநோக்கு கருத்து மிகவும் முக்கியமானதேயாகும்.

பாழாய்ப்போன கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்கள்

❒ கே.பி. கண்ணன்

500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று பிரதமர் நரேந்திர மோடி நவம்பர் 8 ஆம் தேதியன்று இரவு திடீரென்று அறிவித்தது போன்ற, ஏறக்குறைய அனைத்து இந்திய மக்களையும் உடனடியாக பாதித்த எந்த ஒரு பொருளாதாரக் கொள்கை அறிவிப்பும் அண்மைக் காலத் தில் இந்தியாவில் வெளியிடப்பட்டதில்லை. திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட இந்த ரூபாய் நோட்டுகளுக்கு மாற்றாக புதிய ரூபாய் நோட்டுகளைப் புழக்கத்தில் விடுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கிக்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பது எவருக்குமே தெரியாத ஒன்றாக இருக்கிறது. **இந்த முடிவினால் ஏற்பட்டுள்ள பேரழிவு என்னவென்றால், செல்லாது என்று அறிவிக்கப்பட்ட ரூபாய் நோட்டுகளின் மொத்த மதிப்பு, நாட்டில் புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளில் 85 சதவிகிதம் அளவு கொண்டதாக இருந்தது என்பதும், மூன்று வார காலத்திற்குப் பிறகும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய ரூபாய் நோட்டுகளின் மொத்த மதிப்பு அதில் ஒரு மிகச் சிறிய பகுதி என்பதும்தான். இது எப்படி இருக்கிறது என்றால், உடலில் உள்ள ஒட்டு மொத்த ரத்தத்தையும் எடுத்துவிட்டு, புதிய ரத்தத்தை சொட்டு சொட்டாக செலுத்துவது போன்றே இருக்கிறது. கள்ள ரூபாய் நோட்டுகளையும் மற்றும் வரி ஏய்ப்பு செய்து, கணக்கில் காட்டப்படாமல் உள்ள கருப்புப் பணத்தையும் ஒழிப்பது ஆகியவையே இப்புதிய கொள்கையின் நோக்கங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன.**

கள்ள புது ரூபாய் நோட்டுகள் அச்சடிக்கப்படுவதை இக் கொள்கையால் தடுத்து நிறுத்திவிடமுடியாது. இரண்டாவதாக, கள்ளப் பணம் என்பது ஏதோ ரூபாய் நோட்டுகளாகக் குவித்து வைக்கப்பட்டிருப்பது அல்ல என்பதும், பணப்புழக்கத்தில் இடம் பெற்றிருப்பதுதான் என்பதும் கவனிக்கத் தக்கது. உயர் மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கள்ளப் பணத்தையும் கூட இந்த நடவடிக்கையால் ஒழிக்க முடியும் என்பது கூட நிச்சயமில்லை. மேலும், கருப்புப் பணம் முழுவதும் 500, 1000 ரூபாய் நோட்டுகளாகவே இருப்பது என்று கருதுவது மிகவும் தவறான ஒரு கருத்தாகும். வருமான வரித்துறையினர் மேற்கொண்ட சோதனைகளில் இருந்து, மொத்த கருப்புப் பணத்தில் இவ்வாறு ரூபாய் நோட்டுகளாக இருப்பது வெறும் 6 சதவிகிதம் மட்டும்தான் என்பது தெரிய வந்துள்ளது. அது உண்மையாக இருந்தால், நாம் கேட்க விரும்பும் கேள்வி இதுதான் : ஒரு எலியைப் பிடிப்பதற்காக ஒரு வீட்டையே நீங்கள் கொளுத்த வேண்டுமா?

இந்திய பொருளாதாரம் பெரும் அளவில் ரொக்கப் பணப் பரிவர்த்தனையின் மூலமே செயல்படுவதாக ரிசர்வ் வங்கி தெரிவிக்கிறது. அமைப்பு ரீதியிலான பொருளாதாரத்திற்கும், அல்லாத பொருளாதாரத்திற்கும் இடையே நிலவும் தோற்ற அளவிலான தொடர்பு காரண மாக, அட்டைகள் வைத்திருப்பவர்கள் கூட தங்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு ரொக்கப் பணப் பரிவர்த் தனையையே நாடுகின்றனர். இந்த நடவடிக்கையின் உடனடியான பாதிப்பாக, நமது மக்களின் அமைப்புரீதியில் அல்லாத பொருளாதாரத்தின் மீது ஒரு கடுமையான தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. அமைப்பு ரீதியில் அல்லாத நமது பொருளாதாரத்தை சற்று உற்றுப் பாருங்கள்; ரொக்கப் பணப் பரிவர்த்தனையையே அது சார்ந்துள்ளது என்பதைக் காண்பதில் வியப்பேதும் இருக்க முடியாது.

10 தொழிலாளர்களுக்கும் குறைவாக பணி செய்யும் அனைத்து பதிவுசெய்யப்படாத தொழில் நிறுவனங்களிலும் அமைப்பு ரீதியில் அல்லாத பொருளாதார நடைமுறையே இடம் பெற்றுள்ளது. 2013-14 ஆம் ஆண்டில் மேற்கொள் ளப்பட்ட அண்மைக்கால மக்கள் தொகைக் கணக்கெடுப் பின்படி, இத்தொழிலாளர்களின் எண்ணிக்கை 576 . 92 லட்சம் என்றும், விவசாயம் மற்றும் பொது நிர்வாகத் துறைகள் நீங்கலான இதர அனைத்துப் பணியிடங்களிலும் இது 98.6 சதவிகிதமாக உள்ளது என்றும் தெரியவந்துள்ளது. இவர்களில் சுயவேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டு பணிபுரியும் 420 லட்சம் பேரும் அடங்குவர். இவர்களுடன் மொத்த விவசாயிகளில் 84 சதவிகிதம் அளவில் இருக்கும் சிறு, குறு விவசாயிகளும் உள்ளனர்.

அமைப்பு சாரா பொருளாதாரம் என்பது பணியமைப் புகள், தொழிற்சாலைகள், நிறுவனங்களின் அளவைக் கொண்டு புரிந்து கொள்ளப்படுவதில்லை; நியமனம் செய்பவரால் எந்த வித பணி, சமூக பாதுகாப்பும் அளிக்கப் படாமல் பணி புரிவோரைக் குறிப்பிடும் பணிநியமனக் கோணத்தைப் புரிந்து கொள்வதாகும். அடையாம் காணப்பட்டுள்ள இத்தகைய 47.2 கோடி பணியாளர்களில், 82 சதவிகிதம் பணியாளர்கள் 10 பணியாளர்களுக்கும் குறைவான பணியாளர்களைக் கொண்டுள்ள அமைப்பு சாரா தொழில்களில் பணியாற்றுகின்றனர். இவர்களில் முறையான, அமைப்பு ரீதியிலான துறைகளில் பணியாற் றும் 10 சதவிகித அமைப்பு ரீதியில் அல்லாத பணியாளர் களும், 8 சதவிகித அமைப்பு ரீதியிலான பணியாளர்களும் உள்ளனர். இந்த 8 சதவிகித பணியாளர்களுக்கு மட்டும் ஓரளவுக்கு பணிப் பாதுகாப்பும், சமூகப் பாதுகாப்பும் கிடைக்கிறது. விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத துறைகளை ஒன்றாக எடுத்துக் கொண்டால், சுயவேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டவர்களில் பெரும் பகுதியினர் உள்ளிட்ட அமைப்பு ரீதியில் அல்லாத பொரு ளாதாரப் பணியமைப்பில் பணியாற்றுவோர் 52 சதவிகிதத் தினர் (24.7 கோடி) ஆவர்; மற்றுமொரு 30 சதவிகிதத்தினர் (13.8 கோடி) அன்றாடக் கூலிகளாவர்.

சுயவேலை வாய்ப்புத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர் களில் பெரும்பாலானவர்கள் தெருக்களில் வியாபாரம் செய்வது, ரிக்ஷா இழுப்பது, ஆட்டோ அல்லது டாக்சி

மொத்த கருப்புப் பணத்தில் இவ்வாறு ரூபாய் நோட்டுகளாக இருப்பது வெறும் 6 சதவிகிதம் மட்டும்தான் என்பது தெரிய வந்துள்ளது. அது உண்மையாக இருந்தால், நாம் கேட்க விரும்பும் கேள்வி இதுதான் : ஒரு எலியைப் பிடிப்பதற்காக ஒரு வீட்டையே நீங்கள் கொளுத்த வேண்டுமா?

ஓட்டுவது, சில்லறை வியாபாரம் செய்வது, தேநீர்க் கடைகள், சிறு உணவகங்களை நடத்துவது, குழாய் வேலை செய்வது, மின்சாரவேலை செய்வது, கலைக் கைப்பொருள்களை செய்வது ஆகிய வேலைகளை சுதந்திரமாக செய்வோரும், பீடி சுற்றுவது, உணவு தயாரிப்பது, அகர்பத்தி தயாரிப்பது போன்று தங்களுக்குக் கிடைக்கக்கூடிய எந்த வேலையாக இருந்தாலும் அவற்றை செய்து வாழ்க்கை நடத்தும் மகளிர் கூட்டமும் அடங்கிய வர்கள்தான். இதுவுமல்லாமல் 12.5 கோடிக்கும் மேலான சிறு, குறு விவசாயிகளும் உள்ளனர். அவர்களது வாழ்க்கை யே அன்றாட ரொக்கப் பணப் பரிவர்த்தனையைச் சார்ந்து இருப்பதாகும். தெருக்களில் காய்கறிகள், பழங்கள், முட்டைகள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக அல்லது எரிபொருள் உள்ளிட்ட, உணவு உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருள்களை வாங்குவதற்கான ரொக்கப் பணம் அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது. அதே போல அவர்களிடம் பொருள்களை வாங்கவோ அல்லது சேவைகளைப் பெறவோ அவர்களது வாடிக்கை யாளர்கள் அல்லது நுகர்வோருக்கும் ரொக்கப்பணம் தேவைப்படுகிறது. தங்களது பயன்பாட்டிற்காக தங்களது கைகளில் உள்ள சொற்ப ரொக்கப்பணத்தை வைத்துக் கொண்டு குறைந்த அளவு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஓரளவுக்கு அவர்களால் முடிகிறது என்றாலும், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வியாபாரம் சரியாக நடக்கவில்லை. அகமதாபாத், தானே, சூரத், கொல்லம் போன்ற நகரங்களின் தொழிற்பேட்டை களில் அமைந்துள்ள சிறு, குறு தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள, பணிபுரிபவர்களுக்குக் கூலி கொடுப்ப தற்கான ரொக்கப் பணப் பற்றாக்குறையால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு இழப்பு ஏற்பட்டுள்ளது.

கூலிப் பணியாளர்களில் மற்றொரு பெரும் பகுதியினர் தினக் கூலிகளாக வேலை செய்பவர்கள் ஆவர். அவர்கள் தின அல்லது வாரக் கூலி அடிப்படையில் வேலை செய்பவர்கள் ஆவர். வேலை இல்லாத போது அவர்களது வாழ்வாதாரத்திற்குத் தேவையான சேமிப்பு எதுவும் அவர்களிடம் இருப்பதில்லை. தங்கள் முதலாளிகள் கொடுத்த பணத்தை மாற்றுவதற்காக அவர்கள் முதலில் சில நாள்கள் வங்கிகளில் வரிசையில் நின்று கொண் டிருந்தனர். இப்போது வேலைக்காரர்களுக்குக் கூலி கொடுக்க முதலாளிகளிடம் ரொக்கப் பணம் இல்லை. கூலியின் ஒரு பகுதிமட்டுமே அவர்களுக்குக் கிடைக்கிறது. கேரளாவில் மட்டுமே வெளி மாநிலங்களில் இருந்து வந்து குடியேறியுள்ள 25 லட்சம் வேலைக்காரர்கள் உள்ளனர். வேலையும் இல்லாமல், தங்களது தேவைக்கான பொருள் களை வாங்கவும் முடியாத அவர்கள் தங்களது சொந்த கிராமங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு கட்டடத் துறைப் பணியாளர்கள் பெங்களூருவில் இருந்தும், ஜவுளித் தொழிலாளர்கள் அகமதாபாதிலிருந்தும், நெசவுத் தொழிலாளர்கள் சூரத்தில் இருந்தும் தங்கள் சொந்த கிராமங்களுக்குத் திரும்பிச் செல்வது பற்றிய அறிக்கைகளும் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. ரொக்கப்பணப் பற்றாக்குறை காரணமாக பின்னலாடைக்குப் பெயர் பெற்ற திருப்பூரில் 60 சதவிகித பணியாளர்களுக்கு மட்டுமே வேலை உள்ள தாகக் கூறப்படுகிறது. இவை ஏற்றுமதியையும் பாதிக்கும். ஜவுளித் துறையையே நம்பியிருக்கும் உள்ளூர் பொரு ளாதாரம், தயாரிப்புகளை வாங்குவதற்கான நுகர்வோர் இன்மையால், பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருப்பதாலும், கடந்த காலத்தில் கொண்டிருந்த தொடர்பு காரணமாகவும் சில சில்லறை விற்பனையாளர்கள் வாடிக்கையாளர்களுக்குக் கடன் கொடுத்து வந்தனர். ஆனால் தாங்கள் விற்பனை செய்வதற்கான பொருள்களை வாங்கி வைப்பதற்கு அவர்களுக்கு ரொக்கப் பணம் தேவைப்படுவதால், அவர் களால் கால வரையறையின்றி வாடிக்கையாளர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு இயலாமல் போகிறது. இங்குமங்கும் சிறிதளவு ரொக்கப் பணம் புழங்கினாலும், நாட்டின் பொருளாதார செயல்பாடுகள் பெரும் அளவில் குறைந்து போயே உள்ளன. நீடித்து நிற்கும் ஆற்றல் அற்ற முறைசாரா பொருளாதாரம் பலவீனமாக இருப்பதால், ரொக்கப் பணப் பற்றாக்குறையின் பாதிப்பு அவர்கள் மீது உடனடியாகவும், நேரடியாகவும் ஏற்படுகிறது.

முறைசார்ந்த - முறைசாரா பொருளாதாரங்களுக்கிடையேயான தொடர்பு

முறை சார்ந்த, முறை சாரா பொருளாதாரங்களுக்கு இடையேயான தொடர்பு முக்கியமாக இரண்டு வகைப் படும். முறை சார்ந்த பொருளாதார நடைமுறையில் தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்கள் முறைசாரா பொருளாதார நடைமுறையில் வாழ்பவர்களால் பயன் படுத்தப்படும் நுகரும் தன்மை ஒன்று. இதனைத் தொடர்ந்து முறைசார்ந்த பொருளாதார நடைமுறையில் உள்ளவர் களும், முறைசாரா பொருளாதார நடைமுறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் பெரும்பாலான வற்றைப் பயன்படுத்துகின்றனர். அது மளிகைக் கடையாக இருக்க லாம், பீடாக் கடையாக இருக்கலாம், ஆட்டோ, டாக்சியாக இருக்கலாம், சிறு உணவு விடுதிகளாக இருக்கலாம், முடிதிருத்தும் நிலையங்களாக இருக்கலாம், தச்சு வேலையாகவோ, குழாய் சரிசெய்யும் வேலையாகவோ இருக்கலாம். இரண்டாவதாக, முறைசாரா பொருளாதார நடைமுறை உற்பத்திப் பொருள்களையும், சேவைகளையும் குறிப்பிடத் தக்க அளவில் முறைசார்ந்த பொருளாதார நடைமுறை நம்பியிருக்கும் பாதிப்பாகும். இவ்வாறு, விவசாய உற்பத்திப் பொருள்கள், கட்டுமானத் தொழிலுக் குத் தேவையான மணல், ஜல்லி, மோட்டார், இரு சக்கர வாகனங்களுக்கான உபரி பாகங்கள், போன்ற பொருள் களின் தேவை மீது ஒட்டு மொத்த பாதிப்பை ஏற்படுத் துகிறது.

(தொடரும்)

நன்றி: 'தி ஃப்ரன்ட் லைன்' 23-12-2016

தமிழில்: த.க.பாலகிருட்டிணன்

கொள்கைக் கருவூலமாய் சுடர் விட்ட திருவாரூர் !

"பொட்டைக் கோழிகள் கூவி பொழுது விடியுமா?"

-ஆண்டாண்டு காலமாக இந்த ஆணாதிக்க சமுதாயத் தில் வழங்கி வரும் ஒரு சொலவடை!

இதனைப் பொய்யாக்கி புது வரலாறு படைத்து நிற்கிறது திருவாரூர்!

திருவாரூரும், கடலூரும் கரங்கள் கோர்த்து பயணிக்கும் ஒரு ரோடு!

அதுதான் ஈரோடு! என்பதை பறைசாற்றும் விதமாக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த திருவாரூரில், கடலூரில் பிறந்த நம் தமிழர் தலைவர் அவர்கள்,

ஈரோட்டில் பிறந்த நம் அய்யா தந்தை பெரியாருக்கு நன்றி அறிவிப்பாய் இந்த மகளிர் எழுச்சி விழாவை கொண்டாட வேண்டும் என்று விழைந்த வரலாற்றை,

மாபெரும் வெற்றி வரலாறாய் சாதித்து காட்டியுள்ளார்கள் நம் திருவாரூர் மகளிர்!

டிசம்பர் 17.12.2016 அன்று காலை தமிழ் நாடெங்கும் 'பொட்டைக் கோழிகள்' கூவித்தான் பொழுது விடிந்தது..

பெண்களே திரளுங்கள் திருவாரூருக்கு!

நம் தீரத்தைக் காட்ட திரட்ட வேண்டும் கூட்டத்தை!

பாரடா எங்கள் மகளிர் கூட்டத்தை! என்று அவர் பெருமிதம் கொள்ள வேண்டும்!

கடலெனத் திரண்டு அவரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டும்!

அவரின் ஆயுள் நீடிக்க அதுவே அரு மருந்து என,

தமிழகமெங்கும் அழைப்புக் குரல்கள்!

தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் மகளிர் படை,

பாடி வீடாம் திருவாரூர் நோக்கி வாகனங்களில் அதிரடி அணிவகுப்பு!

எல்லோரையும் மிஞ்சும் விதமாய் திருவாரூர்;

அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து எவ்வளவு மகளிர்!

தமிழ்நாட்டுக்கே ஒரு எடுத்துக்காட்டு அவர்கள்!

தந்தை பெரியாரை இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டிருக்கும் இந்துத்துவா கூட்டங்களையும், அவர்களிடம் சோரம் போன நம்மவர்களின் கன்னங்கள் எல்லாம், பளார் பளார் என்று மாறி மாறி அறை வாங்கிய உணர்வைக் கொடுத்தது , மாநாட்டில் நடை போட்ட அதிரடிப் படை பேரணி!

இந்த மாபெரும் மாநாட்டின் வெற்றியின் பின்னணிச் சரித்திரம் என்னவென்றால் தொடர்ந்து திட்டமிட்ட பிரச்சார முனைப்பு !

இரண்டு வாரங்களுக்கு முன்னரே தோழர் செந்தமிழ்ச் செல்வி அவர்கள் அனைத்து மாவட்டத்தினரிடமும் பேசுகிறார்...

அடுத்து பொதுச் செயலாளர் தஞ்சை இரா. ஜெயக்குமார் பேசுகிறார்... அடுத்து தோழர் கலைச்செல்வி அமர்சிங் பேசுகிறார்....

மீண்டும் மீண்டும் பேசுகிறார்கள்...

நன்கொடை வேண்டும் துண்டறிக்கைகளும், ரசீதுகளும், தொடர்ந்து அழைப்பிதழ்களும் உரிய நேரத்துக்கு வந்து சேர்ந்தன.

அருமையான கருத்தரங்கங்கள், காண்போர் வியக்கும் கலை நிகழ்ச்சிகள், மாநாட்டு சிறப்புகள்!

சிந்தனை தூண்டும் தமிழர் தலைவரின் உரை

மாநாட்டின் தங்க முத்திரை !

அய்யா அவர்களின் உரையில் "காலில் விழும் கலாசாரம் ஒழிய வேண்டும்!

யார் காலிலும் யாரும் விழக்கூடாது" என்று ஒரு எச்சரிக்கை அறிவுரையை வழங்கியிருந்தார்.

கலங்கரை விளக்கங்கள் எந்தக் கப்பலோடும் கடலில் பயணம் செய்வதில்லை!

திசை காட்டுவது மட்டுமே அதன் பொறுப்பு!

அதனை ஏற்று ஒழுங்காக செல்கிற கப்பல்களும் உண்டு!

திசை தவறி செல்கிற கப்பல்களும் உண்டு!

சுழல்களில் அடித்துச் செல்லப்பட்டு சுக்கு நூறான கப்பல்களும் உண்டு!

தருமபுரி மாவட்ட மகளிர் தோழியர்கள், மாவட்டத் தலைவர் வீ. சிவாஜி அவர்கள் தலைமையில் திருவாரூர் சென்று வந்ததையும் நன்றியோடு நினைத்து பார்க் கின்றோம்!

மாநாட்டின் வெற்றிக்கு ஒத்துழைத்த அனைத்து தோழர்களுக்கும் நன்றி! பாராட்டுதலுக்குரியவர்கள்!

தோழர் செந்தமிழ்ச்செல்வி அவர்களுக்கு வழங்கப் பட்ட திராவிடர் மகளிர் பாசறை மாநில செயலாளர் பொறுப்பு மாநாட்டிற்கு வருகை தந்த அத்துணை மகளிர்க்கும் வழங்கப்பட்ட அங்கீகாரம்!

தமிழர் தலைவருக்கு எங்கள் நன்றிகளை உரித்தாக்கு கிறோம்!

வாழ்க பெரியார்! வெல்க திராவிடர் கழகம்!

- தகடூர் தமிழ்செல்வி

30.12.2016 வெள்ளிக்கிழமை

புதிய கல்விக் கொள்கை - "நீட்" நுழைவுத் தேர்வை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்

திருச்சி: காலை 11 மணி ● இடம்: திருச்சி சிந்தாமணி அண்ணாசிலை அருகில், திருச்சி-2 ● தலைமை: **அ.எழிலரசன்** (மாநில துணைத்தலைவர் தமிழக ஆசிரியர் கூட்டணி) ● முன்னிலை: ஆ. இரமேஷ், (பொதுச் செயலாளர், தமிழ்நாடு மே.நி.பள்ளி தலைமையாசிரியர் கழகம்), சி.மகேந்திரன் (மாநில பொதுச் செயலாளர், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம்), ஆர். குணசீலன் (மாநிலப் பொருளாளர், தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்), மதனா (மாநில மகளிரணி செயலாளர், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்), லா.அந்தோணி எட்வர்ட் ராஜ் (மாவட்டச் செயலாளர், தமிழக ஆசிரியர் கூட்டணி), சவு.கிருஷ்ண குமாரி (மாநில மகளிரணி செயலாளர், தமிழக ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி), ஆர்.பக்கிரிசாமி (மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு உயர்நிலை-மேல்நிலைப்பள்ளி, தலைமையாசிரியர் கழகம்), கோ.நாகராசன், (மாவட்ட செயலாளர் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி), உதுமான் அலி (மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம்), செந்தில்குமார் (மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு), மா.அழகிரிசாமி (பொதுச் செயலாளர், பகுத்தறிவாளர் கழகம்), ஞா.ஆரோக்கியராஜ் (மண்டல தலைவர்), மு.நற்குணம் (மண்டல செயலாளர்), ச.கணேசன் (மாவட்ட தலைவர்), இரா.மோகன் தாசு (மாவட்ட செயலாளர்) ● குறிப்பு: திருச்சி, கரூர், லால்குடி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, அறந்தாங்கி கழக மாவட்ட தோழர்கள் திருச்சியில் பங்கேற்க கேட்டுக் கொள்கிறோம் ● நன்றி: பா. ஆல்பர்ட் (இலால்குடி துணைத் தலைவர்) ● ஏற்பாடு: மண்டல - மாவட்டதிராவிடர் கழகம், திருச்சி.

தூத்துக்குடி: காலை 11 மணி ● இடம்: தூத்துக்குடி பாளை சாலையிலுள்ள நாம் தமிழர் வளாகம் அருகில் ●தலைமை: **சு.காசி** (மாவட்டத் தலைவர்) ● முன்னிலை: வெ.இராசேந்திரன் (மாநிலப் பிரச்சாரச் செயலாளர், த.நா.மே.நி.ப.மு.நி.ப. ஆசிரியர் கழகம்),க. நல்லதம்பி (மாநிலத் துணைத் தலைவர், ப.க.), பேரசிரியர் இர. கனகராசு (மண்டலச் செயலாளர்), பேராசிரியர் தி.ப.பெரியாரடியான் (பொதுக்குழு உறுப்பினர்), சீ.டேவிட் செல்லத்துரை (தலைமைச் செயற்குழு உறுப்பினர்), இரா.காசி (தலைவர், நெல்லை மாவட்டம்), ச.இராசேந்திரன், (நெல்லை மாவட்ட தி.க.), விடுதலை தி.ஆதவன் (தலைவர், விருதுநகர் மாவட்டம்), வெ.முரளி நாராயணசாமி (செயாலாளர், விருதுநகர் மாவட்டம்) ● வரவேற்புரை: மா.பழனிச் சாமி (மாவட்டப் பொருளாளர், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி) ● சிறப்புரை: **செ.சாமுவேல் துரை** (மாவட்டப் பொருளாளர், தமிழக ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணி), **அ.சற்குணராஜ்** (த.நா.மே.நி.ப.மு.ப. ஆசிரியர் சங்கம்), **எ.அந்தோனி எட்விட் பூஜின்** (மாவட்டச் செயலாளர், தனியார் பள்ளி ஆசிரியர் சங்கம்) ● நன்றியுரை: ச.வெங்கட்ராமன் (மாவட்ட தலைவர், ப.க.)

நாகர்கோவில்: காலை 11 மணி ● இடம்: தலைமை தபால் நிலையம், நாகர்கோவில் ● தலைமை: **அஜான் உபால்ட்** (மாநில பொருளாளர் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம்) ● முன்னிலை: அ.சற்குணராஜ் (மாநில அமைப்புச் செயலாளர், தமிழ்நாடு மேநிலைப் பள்ளி முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம்), பால் ராசேந்திரம் (மண்டல தலைவர்), கே.டி.குருசாமி (மாநில துணைத் தலைவர் பகுத்தறிவாளர் கழகம்), ப.முருகபதி (குமரி மாவட்டத் தலைவர்), சி.கிருஷ்ணேஷ்வரி (குமரி மாவட்டச் செயலாளர்), கோ. வெற்றிவேந்தன் (நெல்லை மண்டல இளைஞரணி செயலாளர்), சோமு.பன்னீர் செல்வம் (மாவட்ட துணைத் தலைவர்), ஆ.கணே சன் (தமிழ்நாடு தொடக்க பள்ளி ஆசிரியர் மன்றம்), சிலுவை இருதயம் (தமிழ்நாடு தொடக்க பள்ளி ஆசிரியர் மன்றம்), சி. எல்.ஜோஸ் (தமிழ்நாடு தொடக்க பள்ளி ஆசிரியர் மன்றம்), ம. தயாளன் பொதுக்குழு உறுப்பினர்), பா.பொன்னுரலசன் (இலக்கிய அணி, மா. தி.கழகம்) ● இவண்: குமரி மாவட்ட திராவிடர் கழகம்.

காஞ்சிபுரம்: காலை 11 மணி ● இடம்: சேக்குப்பேட்டை நடுத்தெரு, காமராஜர் ரோடு, காஞ்சிபுரம் ●தலைமை: **இரா.தாஸ்** (மாநில பொதுச்செயலாளர், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி), முனைவர்: **ப.நடராசன்** (மாநில பொதுச்செயலாளர், தமிழ்நாடு உயர் நிலை மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் கழகம்), **ஆ.இரா.பாலகிருஷ்ணன்** (மாநில தலைவர் தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர் கழகம்) ● முன்னிலை: தி.சேகர் (மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம்), டி.ஏ.வி. அசோகன் (காஞ்சி மாவட்டத் தலைவர்), பொதட்டூர் புவியரசன் (கழக பேச்சாளர்), பு.எல்லப்பன் (காஞ்சி மண்டலத் தலைவர்), பா.கதிரவன் (காஞ்சி மண்டலச் செயலாளர்), இரா.சக்திவேல் (காஞ்சி மாவட்டச் செயலாளர்) ● நிகழ்ச்சி ஏற்பாடு: காஞ்சிபுரம் மாவட்ட திராவிடர் கழகம்

மதுரை: காலை 10 மணி ● இடம்: அம்பிகா திரையரங்கம் அருகில், அண்ணாநகர், மதுரை-20 ● தலைமை: **சாமிசத்தியமூர்த்தி** (மாநிலத் தலைவர். தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் கழகம்) ● **இரா.இளங்கோவன்** (மாநில பொதுச் செயலாளர் தமிழ்நாடு மேநிலைப்பள்ளி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்) ● முன்னிலை: சு.ப.கிருஷ்ணமூர்த்தி , ஆ.பீட்டர் ராஜா, ரமேசு (மாநில துணைத்தலைவர், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றச் சங்கம்), தே.எடிசன்ராசா (தலைமை செயற்குழு உறுப்பினர்), சாமி.திராவிடமணி (தலைமை செயற்குழு உறுப்பினர்), பொ.நடராசன் (நீதிபதி பணிநிறைவு), ச.இன்பலாதன், வா.நேரு (மாநிலத் தலைவர் ப.க), வே.செல்வம் (அமைப்புச் செயலாளர்) ● கண்டன உரை: வே.பிச்சை (மாவட்டச் செயலாளர். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்), தே.முருகன் (மாவட்டச் செயலாளர். தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி), வீ.சண்முக சுந்தரம் (மாவட்டச் செயலாளர். தமிழக ஆசிரியர் கூட்டமைப்பு), க.ராசுக்குமார் (மாநில இளைஞரணித் தலைவர், தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி), முருகன் (மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம்), மா.செல்லப் பாண்டியன் (மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி), பா.அருண்குமார் (மாவட்டச் செயலாளர். தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி).

சமாஜ்வாடி சார்பில் நினைவிடத்தில் மரியாதை

தந்தை பெரியார் 43ஆவது நினைவுநாளில் (24.12.2016) சமாஜ் வாடி கட்சியின் சார்பில் தந்தை பெரியார் நினைவிடத்தில் மரியாதை செலுத்தப்பட்டது. தமிழ்நாடு மாநிலத்தின் பொறுப்பாளர்கள் வாசு தலைமையில் சென்னை வேப்பேரி பெரியார் திடலில் தந்தை பெரியார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

புதிய கல்விக் கொள்கை, நீட் நுழைவுத் தேர்வை எதிர்த்து திருவாரூரில் மிகுந்த எழுச்சியுடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்

கழகக் கலந்துரையாடலில் முடிவு

திருவாரூர், டிச. 29- புதிய கல்விக் கொள்கை, நீட் நுழைவுத் தேர்வு ஆகியவற்றை எதிர்த்து டிச. 30இல் திருவாரூரில் நடை பெறும் பெற்றோர் ஆசிரியர் மாணவர் பங்கேற்கும் முத்த ரப்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பாக திரு வாரூர் பெரியார் படிப்பகத்தில் கலந்துரையாடல் கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் எஸ்.வி.சுரேஷ் தலைமை வகித்தார். மாநில பகுத்தறிவு ஆசிரியரணி அமைப்பாளர் சி.இரமேசு, தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் ஆர். மதிவாணன், தமிழக ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் அ.முரளி, பட்டுக்கோட்டை ப.க. மாவட்டத் தலைவர் த. வீரமணி, மாநில விவசாயத் தொழிலாளர் அணி மாநில செயலாளர் வீ.மோகன், தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர் சங்க அமைப்புச் செயலர் க.கருணா காளிதாசன் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

கூட்டத்தில் ஆசிரியர் ஆ. முருகையன், ஆசிரியர் மன்ற மாவட்டச் செயலாளர் பெ. ரா.இரவி, பகுத்தறிவு ஆசிரிய ரணி குடந்தை மாவட்ட அமைப்பாளர் அ.விஜயபூபா லன், தமிழ்நாடு ஆசிரியர் மன் றப் பொருளாளர் கு.நடராஜன், ஆசிரியர் மன்ற ஒன்றிய பொரு ளாளர் கி.முருகேசன், மாவட் டச் செயலாளர் சு.கிருஷ்ண மூர்த்தி, நகரத் தலைவர் சு. மனோகரன், மாவட்டத் துணைத் தலைவர் அருண்காந்தி, மாவட்ட இளைஞரணிச் செயலாளர் எஸ்.ராஜமணிகண்டன் ஆகி யோர் கலந்துகொண்டு கருத்து ரையாற்றினர்.

கூட்டத்தில் பங்கேற்ற ஆசிரியர் மன்றங்களும், ஆதரவு ஆசிரியர் மன்றங்களில் இருந்தும் அதிகமான ஆசிரியர் பெருமக்களையும், பெற்றோர் மாணவர்களையும் அதிக அள வில் பங்கேற்கச் செய்து டிச. 30இல் நடைபெறும் ஆர்ப்பாட் டத்தினை சிறப்பாக நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

தெய்வானை அம்மையாரின் நினைவேந்தல் - படத்திறப்பு

வேலூர், டிச. 29- வேலூர் அடுத்த மேல்வல்லம் கிராமத்தைச் சேர்ந்த மாவட்ட ப.க. துணைத் தலைவர் அ.சோமசுந்தரம் அவர்களின் தாயாரும் மறைந்த அண்ணாமலை அவர்களின் துணைவியாரும் ஆகிய தெய் வானை அம்மாள் அவர்கள் உடல் நலக் குறைவால் கடந்த 9.12.2016 அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் கண்கள் கொடையாக அளிக்கப்பட்டன. அவரது நினைவேந்தல் படத் திறப்பு நிகழ்ச்சி அவர்களது இல்லத்தில் 25.12.2016 அன்று காலை 11.30 மணியளவில் நடைபெற்றது.

மேனாள் இராணுவ வீரர் மு.சுப்பராயன் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். ஓய்வு பெற்ற ஆசிரியர் மு.சிவலிங் கம், மேனாள் இராணுவ வீரர் இரா.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரி யர் அ.சோமசுந்தரம் வரவேற்பு ரையாற்றினார்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மு.சுப்ரமணியன், அச்சுதானந் தன் ஆகியோர் மறைந்த அம் மையார் அவர்களின் விருந் தோம்பல், பழகும் பண்பு, பிள் ளைகளை நற்பண்புகளுடன் வளர்த்தது போன்ற குணநலன் களைப் பாராட்டி உரையாற்றி னர்.

வேலூர் உதவும் உள்ளங்கள் நிறுவனம் இரா.சந்திரசேகர் அவர்கள் மறைந்த தெய்வானை அம்மையாரின் படத்தினை திறந்து வைத்து உரையாற்றி னார்.

குருதிக் கொடை, கண்கள் கொடை, உறுப்புக் கொடை மற்றும் உடற்கொடை பற்றி விரிவாக எடுத்துக்கூறி விழிப் புணர்வு ஏற்படுத்தினார்.

மறைந்த அம்மையாரின் மகன் ஆசிரியர் அ.சோமசுந்த ரம், விஜயலட்சுமி குடும்பத்தி னரும், அண்ணாமலை, தெய் வானை பெயரில் அறக்கட் டளை துவங்கி 70 ஏழை மாண வர்களுக்கு எழுதுபொருள், 25 மாணவர்களுக்கு சீருடை, 25 முதியோர்களுக்கு புடவை, வேட்டியும் வழங்கினார்கள்.

திருச்சி நாகம்மையார் குழந்தைகள் இல்லத்திற்கு அறக்கட்டளை சார்பில் ரு.3000 (மூன்றாயிரம்) வேலூர் கழக மாவட்ட செயலாளர் கு.இளங் கோவன் அவர்களிடம் நன் கொடையாக வழங்கப்பட்டது. இல்லக் குழந்தைகள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

உதவும் உள்ளங்கள் அமைப் புக்கு ரூ.1000 வழங்கப்பட்டது. பொதுமக்கள் பெரும் அளவில் கலந்து கொண்டனர்.

ஓய்வுபெற்ற ஆசிரியை அ. குமுதவல்லி அவர்கள் நன்றி கூறினார். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

30.12.2016 வெள்ளிக்கிழமை

புதிய கல்விக் கொள்கை - "நீட்" நுழைவுத் தேர்வை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்

புதுச்சேரி: மதியம் 3 மணி ● இடம்: அண்ணா சிலை அருகில், ஒதியன் சாலை, புதுச்சேரி ● தலைமை: **சிவ.வீரமணி** (தலைவர், புதுச்சேரி மாநில திராவிடர் கழகம்) ● வரவேற்புரை: **இர.இராசு** (மண்டல தலைவர்) ● **இரா.சிவா** (சட்டமன்ற உறுப்பினர், தலைவர், பிப்டிக் புதுச்சேரி தெற்கு மாநில அமைப்பாளர், திமுக), ஆர்.பி.எஸ்.பன்னீர்செல்வம் (மண்டல தலைவர்), எஸ்.தண்டபாணி (மண்டல செயலாளர்), **இரா.விசுவநாதன்** (மாநில செயலாளர், சிபிஅய்), **தென். சிவக்குமார்** (தலைவர்), **இரா. இராசாங்கம்** (செயலாளர். சிபிஎம்), **தேவ.பொழிலன்** (முதன்மை செயலாளர், விடுதலை சிறுத்தைகள் கட்சி), நா.தாமோதரன் (செயலாளர்), சு.பஷீர் அகமது (செயலாளர், மனிதநேய மக்கள் கட்சி), மணிவேல் (அமைப்பாளர்), சி.எம்.புரட்சிவேந்தன் (தலைவர், லோக் ஜனசக்தி கட்சி), வி. திராவிடன் (மண்டல செயலாளர், இளைஞரணி), எச். ஹயருல்லா (தலைவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்), இரா. மங்கையர்செல்வன் (நிறுவன அமைப்பாளர், மீனவர் விடுதலை வேங்கைகள்), பூ.சி.இளங்கோவன் (தலைவர்), இரா.அழகிரி (தலைவர், தமிழர் தேசிய இயக்கம்), அன்பு.சித்தார்த்தன் (செயலாளர்), கொ.ஜெகன்நாதன் (தலைவர், மக்கள் வாழ்வுரிமை இயக்கம்), சோ.சுகுமாறன் (செயலாளர், மக்கள் உரிமை கூட்டமைப்பு) ● நன்றியுரை: ஆ.சிவராமன் (நகர அமைப்பாளர்) ● நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: திராவிடர் கழகம், பகுத்தறிவாளர் கழகம், புதுச்சேரி

சேலம்: காலை 11 மணி ● இடம்: தலைமை அஞ்சலகம், சேலம். ● தலைமை: **க.செல்வராஜ்** (மாநில பொதுச் செயலாளர், தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி) ● வரவேற்புரை: அ.அறிவுச்செல்வன் (மாவட்ட அமைப்பாளர், பகுத்தறிவாளர் கழகம்) ● முன்னிலை: **இரா. குணசேகரன்** (தலைமை செயற்குழு உறுப்பினர்), கி.ஜவகர் (மாவட்ட தலைவர்), **பழனிபுள்ளையண்ணன்** (தலைமை செயற்குழு உறுப்பினர்), கிருட்டிணமூர்த்தி (மாவட தலைவர்), புத்தூர் நீ.சேகர் (மாவட்ட செயலாளர்), சி.சுப்பிரமணியன் (மண்டலத் தலைவர்), கா.நா.பாலு (மாவட்ட செயலாளர்), அ.ச.இளவழகன் (மண்டல செயலாளர்), கடவுள் இல்லை. கி. சிவக்குமார் (மாவட்ட செயலாளர்), பூ.வடிவேல் (மாநகர தலைவர்), த.வானவில் (மாவட்ட தலைவர்), அரங்க. இளவரசன் (மாநகர செயலாளர்) ● ஆர்ப்பாட்ட உரை: பா.வையாபுரி (மாநில துணை செயலாளர், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்), தாஸ் (மாநில பொதுச் செயலாளர் தமிழக ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி), மு.மோகன் (மாவட்ட தலைவர், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்),, அ.அண்ணாதுரை (மாநிலத் தலைவர்), எம்.பழனிமுத்து (மாநிலத் தலைவர், தமிழக பள்ளி ஆசிரியர் கூட்டணி), முருகவேல் (மாவட்ட தலைவர், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்), இரா. இளங்கோவன் (மாநில பொதுச் செயலாளர், தமிழ்நாடு மேநிலைப் பள்ளி முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம்). க.உதயகுமார் (மாவட்ட தலைவர், தமிழக ஆசிரியர் கூட்டணி (அய்பெட்டோ) ● நன்றியுரை : ச.வெ.இராவணபூபதி, மாவட்ட அமைப்பாளர், சேலம் மாவட்ட திராவிடர் கழகம்.

நன்கொடை

அரக்கோணம், புதூர் பகுதி தோழர் **ச.ஏழுமலை** அவர்கள் கழக வளர்ச்சி நிதியாக ரூ.100 வழங்கினார்.

பூண்டி இரா.கோபால்சாமி **சுப்திரா கோபால்சாமி** நினைவு நாளையொட்டி திருச்சி நாகம்மையார் குழந்தைகள் இல்லத்திற்கு ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது.

இராசபாளையத்தில் அய்யாவின் அடிச்சுவட்டில் நூல் வெளியீடு

இராசபாளையம், டிச. 29- இராச பாளையம் மாவட்ட கழகம் சார்பில் 17.12.2016 அன்று மாலை 5 மணிக்கு சவகர் திடலில் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்களின் 84ஆவது ஆண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டமும் அய்யாவின் அடிச்சுவட்டில் நூல் அறிமுக விழாவும் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் இல. திருப்பதி தலைமையில் மாநில ப.க.துணைத் தலைவர் கேடிசி குருசாமி ஆதவன், பகீரதன் முன்னிலையில் தமிழாசிரியர் அ . நெ டு ஞ் சே ர லா தன் அவர்கள் நூலினை திறனாய்வு செய்து பேசினார். திமுக நக ரச் செயலாளர் பேங்க் பி. இராமமூர்த்தி அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த் தினார். மாவட்டச் செயலாளர் பூ.சிவக்குமார் இணைபுரை ஆற்றினார். முதல் நூலினை இராசபாளையம் சட்டமன்ற உறுப்பினர் வீ.தங்கப்பாண்டி யன் வெளியிட திமுக மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுமதி ராமமூர்த்தி பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சேத்தூர் பேரூர் கழகச் செயலாளர் சிங்கப்புலி அண்ணாவி, சோ.ஞானராஜ், பதிவு ஜமால், நகரத் துணைச் செயலாளர் போ.சரவணன், செ.வேல்முருகன், இரா. முத்துகணேஷ், இரா.கோவிந் தன், நல்லசிவம் மற்றும் ஏரா ளமானோர் புத்தகங்களை பெற்றுக் கொண்டனர்.

கூட்டத்தில் சிறப்புரை யாற்றிய திமுக செய்தி தொடர் பாளர் வழக்குரைஞர் தமிழன் பிரசன்னா அவர்கள் தந்தை பெரியார் பற்றியும், திமுகவிற் கும், திராவிடர் கழகத்திற்கும் உள்ள தொடர்பு பற்றியும், விரிவாகவும், விளக்கமாகவும் உரையாற்றினார். தொடர்ந்து ஆதி தமிழர் பேரவை தமிழ ரசு, விடுதலை அரசு ஆகி யோர் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்தின் இறுதியாக மாவட்ட அமைப்பாளர் இரா.பாண்டிமுருகன் நன்றி கூறினார். மிகுந்த எழுச்சி யுடன் நடைபெற்ற இப் பொதுக்கூட்டத்தில் ஏராள மான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன. கூட்டத்தில் பெருவாரியான பொது மக் கள் கலந்து கொண்டனர்.

உலகப் பகுத்தறிவு நாளேடு
'விடுதலை'யில்
விளம்பரம் செய்து
பயனடைவீர்!
தொடர்புக்கு:
90031 18455, 97109 44813

24.12.2016 அன்று சென்னை ஆலந்தூரில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு பெரியார் பிஞ்சு வீரசுந்தர், கார்த்தி, சத்யா மாலை அணிவித்து சிறப்பு செய்தனர். சென்னை மண்டல திராவிடர் கழகத் தலைவர் தி.இரா.இரத்தினசாமி உறுதி மொழி சொல்லச் சொல்ல தோழர்கள் உறுதி மொழி ஏற்றனர். நன்றி உரை ஆற்றினார் அய்யப்பன்.

கிருட்டிணகிரி மாவட்ட இளைஞரணி தோழர் த.மு.நாவரசன், அவரது இணையர் கவிதா (மகளிர் பாசறை) ஆகியோர் இணைந்து கழகத் தலைவர் ஆசிரியர் அவர்களின் பிரச்சார ஊர்தி நிதியாக ரூ.1000த்தை மாவட்ட தலைவர் மு.துக்காராம், மாவட்ட இணை செயலாளர் சு.வனவேந்தன் ஆகியோரிடம் வழங்கினர். உடன் வேலூர், புதுமாங்காடு நகர தலைவர் விநாயகம்.

கோவை மருத்துவர் நாச்சியப்பன் படத்திறப்பு-நினைவேந்தல்

கோவை சுந்தராபுரம், டிச. 29- பெரியார் பெருந்தொண்டரும், இரு பெரும் பகுத்தறிவாளர் கழக மாநாடுகளை கோவையில் நடத்தி சாதனை புரிந்தவரும், தற்போது கோவை ஆட்சியர் அலுவலகம் அருகிலுள்ள ஜி.டி.நாயுடு வளாகத்தில் கோவை மாவட்ட திராவிடர் கழகத்திற்கு மாவட்ட அலுவலகம் வாடகையின்றி கிடைக்கக் காரணமானவருமான ஓய்வு பெற்ற கால்நடை மருத்துவர் துரை.நாச்சியப்பன் அவர்கள் கடந்த 13.12.2016 அன்று அமெரிக்காவில் உடல் நலக்குறைவால் மறைவுற்றார்.

கோவை மாவட்ட திராவிடர் கழகம், பகுத்தறிவாளர் கழகம் சார்பில் 18.12.2016 அன்று அவரது உருவப் படத்திறப்பு நினைவேந்தல் நிகழ்வு கோவை சுந்தராபுரம் ஆனந்தாஸ் உணவகம், அனிச்சம் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்கேற்று மருத்துவர்.துரை.நாச்சியப்பன் உருவப்படத்தை பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தின் முன்னாள் இணை, துணை வேந்தருமாகிய பேராசிரியர். தவமணி அவர்கள் திறந்து வைத்தார்.

தலைமைக் கழகப் பேச்சாளர் இரா.பெரியார் செல்வன், கோவை மண்டல செயலாளர் ம.சந்திரசேகர், மாவட்ட தலைவர் ப.மோகன், செயலாளர் திக. செந்தில்நாதன், மாநகர தலைவர் சிற்றரசு, பகுத்தறிவு கலை இலக்கிய அணியைச் சார்ந்த இ.கண்ணன், பக செயல் வீரரும், மருத்துவர் துரை. நாச்சியப்பன் அவர்களின் உற்ற தோழருமான மூக்கையா (ஓய்வு பெற்ற தொழிலாளர் நலத்துறை உயர் அலுவலர்) உள்ளிட்ட திக, பக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கல்லக்குறிச்சியில் எழுச்சியுடன் நடைபெற்ற அய்யாவின் அடிச்சுவட்டில்-பாகம் 5 நூல் வெளியீட்டு விழா

கல்லக்குறிச்சி, டிச. 29- கல்லக்குறிச்சியில் தமிழர் தலைவர் ஆசிரியர் கி வீரமணி பிறந்த நாள் விழாவும், அய்யாவின் அடிச்சுவட்டில் பாகம் 5 நூல் வெளியீட்டு விழாவும் ஊராட்சி ஒன்றிய பெண்கள் நடுநிலைப் பள்ளியில் 14.12.2016 புதன் மாலை 6 அளவில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட செயலாளர் வழக்குரைஞர் கோ. சா.பாஸ்கர் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் ம.சுப்பராயன் வரவேற்புரையாற்றினார். மாநில மருத்துவரணி செயலாளர் கோ.சா.குமார், விழுப்புரம் மண்டல திராவிடர் கழக செயலாளர் மு.கண்ணன், கல்லக்குறிச்சி நகர தலைவர் ச.சுந்தரராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திராவிடர் கழக பொதுச் செயலாளர் முனைவர் துரை. சந்திரசேகரன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அவர் தமது உரையில், "தமிழர் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் தமது 10 வயதிலிருந்து அய்யா அவர்களுடன் பிரச்சார களங்கள், மாநாடுகள், பொதுகூட்டங்கள், மறியல் போராட்டங்கள் ஆகியவைகளில் ஈடுபட்டு அய்யாவின் பகுத்தறிவு கொள்கைகளை பரப்பியவர். இந்தி எதிர்ப்பு போராட்டம், சாதி தீண்டாமை ஒழிப்பு போராட்டம். சமூக நீதி போராட்டம், ஆகிய அனைத்திலும் ஈடுபட்டு அய்யாவினுடைய கொள்கைகளை முன்னெடுத்துச் சென்றவர். அய்யாவின் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக வேண்டும் என்ற போராட்டத்தை நடத்தியவர். அய்யா அவர்களுக்கு யுனெஸ்கோ விருது அய்.நா. சபையால் கொடுக்கப் பட்டபோது இந்தியா முழுவதும் அய்யாவின் அருமை பெருமைகளை உணரச் செய்தவர். அய்யாவின் மறைவிற்குப் பிறகு அன்னை மணியம்மையார் கழகத் தலைமையை ஏற்று நடத்திய போது பெரியாரின் சிந்தனைகளை அன்னையார் அவர்களின் கட்டளைப்படி இந்தியா முழுவதும் பரப்பியவர். டில்லியில் இராம் லீலா நடத்திய போது சென்னையில் பெரியார் திடலில் இராவண லீலாவை அன்னையார் நடத்த மிகவும் உறுதுணையாக இருந்தவர்.

மிசா காலத்தில் அன்னை மணியம்மையாருடன் ஆசிரியர் அவர்களும், திராவிடர் கழகப் பொறுப்பாளர்களும் கைது செய்யப்பட்டு தண்டனைகள் அனுபவித்தபோதும் அய்யாவின் சிந்தனைகள் அகிலம் முழுவதும் பரவுவதற்கு வழி வகை செய்பவராக இருந்தார். சிறையிலிருந்து மீண்டு வந்த பின் திராவிடர் கழகத்தை முன்னிலும் வேகமாக நடத்துவதற்கு அன்னை மணியம்மையார் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார்.

அன்னை மணி யம்மையார் காலத்திலேயே ஆசிரியர் வீரமணி அவர்கள் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராக சிறப்பான பணிகளைச் செய்து வந்தார். அன்னை மணியம்மையார் மறைவிற்குப் பின் திராவிடர் கழகத்தை பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையே மிகச் சிறப்பாக நடத்திச் சென்றார். தமிழ்நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு ஆபத்து வந்த போது தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா, பிரதமர் பி.வி நரசிம்மராவ், குடியரசு தலைவர் சங்கர்தயாள் தர்மா ஆகியோரைக் கொண்டு சட்டப் பாதுகாப்பு தந்தார். மத்திய அரசில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 27 விழுக்காடு அளிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்த நீதிபதி மண்டல் குழு அறிக்கையை செயல்படுத்த 49 போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டார். இன்று இந்தியாவில் உள்ள அனைத்து பிற்படுத்தப்பட்ட மக்களும் பலனடைந்து வருகின்றனர் என்றால் அதற்கு காரணம் தமிழர் தலைவரும், திராவிடர் கழகமும் மட்டுமே.

மத்திய மாநில அரசுகள் மக்களுக்கு விரோதமான கொள்கைகளை, சட்டங்களை, செயல்பாடுகளை மேற்கொள்ளும் போது அவைகளால் விளையும் கேடுகளை சுட்டிக்காட்டி தன்னுடைய கருத்துகளை தெரிவிக்கிறார். மேலும் அவற்றை எதிர்க்க கண்டன ஆர்ப்பாட்டங்கள், மறியல் போராட்டங்கள் நடத்தி எத்தகைய சிறைத்தண்டனை வந்தபோதும் துணிவாக தானே கலந்து கொண்டும், திராவிடர் கழகத்தினரையும், இனவுணர் வாளர்களையும் கலந்து கொள்ளச் செய்கிறார். பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் மூலம் 46 கல்வி நிறுவனங்களை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறார். திருச்சி சிறுகனூரில் பெரியார் உலகம் என்ற சுற்றுலா தலத்தை பன்னாட்டு அளவில் அமைக்கவும் அதன் மூலம் அனைத்து தரப்பு மக்களையும் சிந்தனையாளர் களாக்க பாடுபட்டு வருகிறார். இத்தகைய தலைவர் எங்கள் தலைவர் தமிழர் தலைவர், அய்யாவின் அடிச்சுவட்டில் என்ற தலைப்பில் நான்கு பாகங்கள் எழுதினார். அவைகள் உலக மக்களின் பேராதரவைப் பெற்றது. அதன் தொடர்ச்சியாக அய்யாவின் அடிச்சுட்டில் பாகம் 5 எழுதப்பட்டு இன்று வெளியிடப்படுகிறது. இதனை இயக்கத் தோழர்களும், பகுத் தறிவாளர்களும், மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களும் வாங்கிப் படிக்க வேண்டும்" என்று கூறி தனது உரையை முடித்தார்.

நூல் வெளியீடு

அய்யாவின் அடிச்சுவட்டில் பாகம் 5 நூலை தியாகதுருகம் நகரத் தந்தையும் மேனாள் மாவட்ட திராவிட முன்னேற்ற கழகப் பொறுப்பாளருமான மிசா.பொன் இராமகிருட்டிணன் வெளியிட்டார். நூல்களை வழக்கறிஞர் சி.வெங்கடாசலம், மேனாள் கல்லக்குறிச்சி ஒன்றியப் பெருந்தலைவர்; சு.அருணாசலம், மேனாள் ஒன்றிய பெருந்தலைவர் அரிய பெருமானூர், மு. கண்ணன், மண்டல செயலாளர்; ம.சுப்பராயன் மாவட்ட தலைவர்; வழக்குரைஞர் கோ.சா. பாஸ்கர், மாவட்ட செயலாளர்; மருத்துவர் கோ. சா.குமார், மாநில திராவிடர் கழக மருத்துவரணி செயலாளர்; கு.சீதா உலக தமிழ் கவிஞர் பேரவை பொதுச் செயலாளர்; த.பெரியசாமி மாவட்ட அமைப்பாளர்; பழனியம்மாள் கூத்தன் மாவட்ட மகளிரணித் தலைவர்; ஓவிய இமயம் முதுபெரும் பெரியார் பெருந் தொண்டர் மு.கலைச்செழியன், பெ. சயராமன் மாவட்ட தி.க. இலக்கிய அணித் தலைவர்; புலவர் பெரியார் நேசன் கல்லக்குறிச்சி ஒன்றிய தி.க. தலைவர்; மருத்துவர் வே. உதயகுமார், மேனாள் இணை இயக்குநர் (மருத்துவத் துறை), புலவர் கு.அன்டிரன் நைனார் பாளையம் திராவிட கழகத் தலைவர்; கா.அசன், சின்ன சேலம் ஒன்றிய திராவிட கழகத் தலைவர்; ஆ.லட்சுமிபதி சங்கராபுரம் நகர ப.க தலைவர்; இரா நாராயணன் சங்கராபுரம் நகர ப.க செயலாளர்; கோ. இராமதாசு ப.க சங்கராபுரம், கோ. வேல்முருகன் மாவட்ட திக இளைஞரணி தலைவர்; பொறியாளர் இரா. ஆனந்தராசு கல்லக்குறிச்சி நகர இளைஞரணித் தலைவர்; செல்வ சக்தி வேல் உளுந்தூர்பேட்டை ஒன்றிய தலைவர்; அரங்க செல்ல முத்து உளுந்துர்பேட்டை ஒன்றிய ப.க தலைவர்; வை.ந. பழனியப்பன் மாவட்ட திமுக, இலக்கிய அணி அமைப்பாளர்; கி.அண்ணாதுரை பட்டதாரி ஆசிரியர் ஆகியோர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

பங்கேற்றோர்

இவ்விழாவில் இரா. நல்ல முத்து கல்லை நகர பொருளாளர்; அ.கரிகாலன் மாவட்ட திக இளைஞரணி அமைப்பாளர்; கா.அசன் சின்னசேலம் ஒன்றிய தலைவர் கருப்புச் சட்டை ஆறுமுகம் திருக்கோவிலூர் ஒன்றிய தலைவர்; மு. சேகர் வடகரை தாழனூர் கிளைக் கழக தலைவர், அ.ச. துரைராசு மாத்தூர் கிளைகழக தலைவர்; அ.பழனிமுத்து மேலூர் கிளைக் கழக தலைவர்; இல.சேரன் சங்கராபுரம் நகர தலைவர்; அர.சண்முகம் ரிஷிவந்தியம் ஒன்றிய செயலாளர், தி.இரா.நெடுஞ்செழியன், மு. சேகர் கலைஞர் பகுத்தறிவு பாசறை; வள்ளல் குமார்; திராவிடன், முத்துகுமரன் வடலூர், தென்னரசு கல்லக்குறிச்சி வட்டார வளமைய கணக்காளர்; ம.சு.தினேஷ் கல்லக்குறிச்சி, மா.முத்தமிழ் முத்தன் ப.க. செ.வ. மதிவானன்; பாரதி கிருட்டிணன், க.பூங்கோதை ப.க. சி.மணிவேல் ப.க., பி.இராச கோபால் ப.க. இ.சித்ரா ப.க உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழா முடிவில் கல்லக்குநிச்சி நகர செயலாளர் இரா.முத்துசாமி நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

உலக அளவில் பல சமுதாயப் புரட்சிகளை உருவாக்கியது புத்தகங்களே!!

கோவை, டிச. 29- உலகளவில் பல சமுதாயப் புரட்சிகளை உருவாக்கியது புத்தகங்களே என்று கோவையில் நடைபெற்ற நூல் அறிமுக விழாவில் இரா.பெரியார்செல்வம் எழுச்சியுரையாற்றினார்.

நூல் அறிமுக விழா

தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கள் எழுதிய இயக்க வரலாறான தன் வரலாற்று நூல் "அய்யாவின் அடிச்சுவட்டில் பாகம் 5" அறிமுக விழா தமிழகமெங்கும் சிறப்பாக நடைபெற்று வருவதன் ஒரு பகுதியாக 18.12.2016, ஞாயிறு மாலை 6 மணியளவில் திராவிடர் கழகத்தின் கோவை மாவட்டம் சார்பில் கோவை,சுந்தராபுரம் ஆனந்தாஸ் உணவகத்திலுள்ள அனிச்சம் அரங்கத்தில் பெருந்திரளான மக்கள் கூட்டத்தின் நடுவே தொடங்கி நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கோவை மாவட்ட கழகத் தலைவர் ப. மோகன் தலைமை தாங்கினார்.

தஞ்சையிலிருந்து வந்து இவ்விழாவில் கலந்துகொண்டு அய்யாவின் அடிச்சுவட்டில் பாகம் 5 நூலை வெளியிட்டு எழுச்சியுரையாற்றிய தலைமை நிலையப் பேச்சாளர் இரா. பெரியார்செல்வன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

நம்முடைய தலைவர் தமிழர் தலைவர் அவர்கள் "அய்யாவின் அடிச்சுவட்டில் பாகம் 5" நூலில் தனிமனித வரலாறு என்பதை இயக்கம் சார்ந்த வரலாறாகப் பதித்துள்ளார்கள்.வரலாற்றுச் சுவடுகளை இயக்கம் சார்ந்த தன்மையில் தலைவர் அவர்கள் தீட்டிய இந்த எழுத்தோவியத்தைப் படிப்பதன் மூலம் இந்த இயக்கம் எவ்வளவு மாற்றங்களை உருவாக்கியிருக்கிறது என்பதை உணரலாம்.

உலகளவில் மாற்றத்தினையும், பல சிந்தனையாளர்களையும், விடுதலை வேட்கையையும் உருவாக்கி அடிமை விலங்கை உடைத்தெறிந்தது புத்தகங்களேயாகும்.

"ஆயிரம் புத்தகங்களை வாசித்த ஒருவனைக் காட்டுங்கள், நான் அவனை தலைவனாக ஏற்றுக் கொள்கிறேன் என்று ஜூலியஸ் சீசர் சொன்னார்! ஜூலியஸ் சீசர் உயிருடன் இருந்திருந்தால் வாசிப்பதையே சுவாசமாகக் கொண்ட தமிழர் தலைவரை தலைவராக ஏற்றுக்கொண்டிருப்பார்"

உலகம் முழுமைக்கும் பெரியார் தத்துவத்தை எடுத்துச் செல்லும் தத்துவத் தூதுவரான தமிழர் தலைவர் அவர்கள் இந்நூலில் பல பதிவுகளைத் தருகிறார். பெரியார் எண்ணத்தை ஈடேற்ற கண் துஞ்சாது கடமையாற்றி 84 ஆம் அகவையிலும் போராட்டக்களம் கண்டு கொண்டிருக்கிற தலைவர்தான் "வீரமணி"!

தமிழர் தலைவர் ஆணை ஒன்றே உரிமை காக்கும் நெறி அதை ஈடேற்றப் புறப்படுங்கள்! வரலாற்றை படித்தால் நம் தலைமுறை முன்னேறும்! இயக்க வரலாற்று நூலான "அய்யாவின் அடிச்சுவட்டில் பாகம் 5" நூலை யாவரும் படித்துப் பயன்பெறவும், பரப்பிடவும் வேண்டுகிறோம் .இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த கோவை மாவட்ட தோழர்களைப் பாராட்டுகிறோம் என்று குறிப்பிட்டார். தலைமைக் கழகப் பேச்சாளர் அவர்களுக்கு கவிக்கிருட்டிணன் பயனாடை வழங்கி சிறப்பு செய்தார்.

பெரியார் மணியம்மை பல் கலைக்கழக முன்னாள் இணை, துணை வேந்தரான பேராசிரியர் தவமணி, வழக்குரைஞர்கள். கண்ணன்,சிலம்பரசன் சிந்து, திமுக சந்திரசேகர், மணிகண்டன், குறிச்சி உதயகுமார், ப.க. அக்ரி நாகராஜ், தொழிலதிபர் நீலகிரி, காங்கிரஸ் கு.பே.துரை, கவிஞர் மணிவண்ணன், சரத்குமார், பிரேம்குமார், சதீஸ்குமார், அல்லா பிச்சை, மண்டல செயலாளர் ம.சந்திரசேகர், தமிழ்முரசு, கு.வெ.கி. செந்தில், வேலாண்டிபாளையம் பிரபு, செந்தில், பொதுக்குழு உறுப்பினர் ச.திலகமணி, வெள்ளளூர் நாகராஜ், பக சிவக்குமார், நடராஜன், அருணகிரி, கிருஷ்ணமூர்த்தி, தமிழ்ச்செல்வம், தளபதி ஆனந்தராஜ், சண்முகம், மே.ப.ரங்கசாமி, இருதயராஜ், செல்வம், கணபதி காமராஜ், திராவிடமணி, விவேக், சக்தி. பழனியப்பன் ஆகியோர் நூலினை தலைமைக் கழகப் பேச்சாளர் வெளியிட பெற்றுக்கொண்டனர்.

உரையாற்றியோர்

மாவட்ட செயலாளர் திக. செந்தில்நாதன் அனைவரையும் வரவேற்றார். கழகப் பேச்சாளர்கள்: "புலியகுளம்" க.வீரமணி, "கோபி" வெ.குமாரராசா, கோவை மாவட்ட குற்றவியல் வழக்குரைஞர் சங்க செயலாளர் கலையரசன், மகளிரணியைச் சார்ந்த முத்துமணி, பகுத்தறிவு கலை இலக்கிய அணியைச் சார்ந்த இ.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் தி. பரமசிவம் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

கோவை மண்டல மகளிரணிச் செயலாளர் ப.கலைச்செல்வி, மகளிரணியைச் சார்ந்த கி.கவிதா, செ.ஜோதிமணி, கோவை மண்டல இளைஞரணிச் செயலாளர் ச.மணி கண்டன், மாணவரணிச் செயலாளர் ரா.சி.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவை மாநகர கழகத் தலைவர் கு.சிற்றரசு தொகுப்புரையாற்றினார்.

பங்கேற்றோர்

கழகப் பொதுக்குழு உறுப்பினர் பழ. அன்பரசு, கோவை சுயமரியாதை திருமண நிலைய அமைப்பாளர் ராஜேஸ்வரி, பகுத்தறிவாளர் கழகத்தைச் சார்ந்த மூக்கையா, மேற்கு பகுதி செயலாளர் கதிரவன், கிழக்கு பகுதி செயலாளர் முருகானந்தம், திருப்பூர் மாவட்ட ப.க. செயலாளர் கு.மணிவண்ணன் உள்ளிட்ட திராவிடர் கழகத்தின் அனைத்து அணித் தோழர்களும், பகுத்தறிவாளர் கழகத்தைச் சார்ந்தவர்களும், முற்போக்கு இயக்கத்தவர்களும், மாற்றுக்கட்சி நண்பர்களும் திரளாகப் பங்கேற்றனர்.

நிகழ்வில் ஆசிரியர் பழனியப்பன் அவர்கள் தமிழர் தலைவரின் பயண ஊர்தி நிதி இரண்டாம் தவணையாக ரூ.1000 வழங்கினார்.

நினைவேந்தல்

நிகழ்வில் 13.12.2016 அன்று அமெரிக்காவில் மறைவுற்ற பெரியார் பெருந்தொண்டரும், கோவை மாவட்ட பகுத்தறிவாளர் கழகத் தலைவருமான மருத்துவர். துரை.நாச்சியப்பன் அவர்களின் உருவப்படம் திறக்கப்பட்டு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. விழா முடிவில் தெற்கு பகுதி செயலாளர் தெ.புண்ணியமூர்த்தி நன்றி நவின்றார்.

கரும்புக்கு ரூ.3,500 கொள்முதல் விலை அளிக்க வேண்டும்
மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

போராட்டம் பற்றியெல்லாம் அரசு கண்டுகொள்ளவே இல்லை.

சென்னை, டிச. 29- கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 கொள்முதல் விலை அளிக்க வேண்டும் என்று தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், திமுக பொருளாளருமான மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று (28.12.2016) வெளியிட்ட அறிக்கை வருமாறு:

கரும்பு டன் ஒன்றுக்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூ.2,850 வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார்.

கரும்புக்கான மாநில பரிந்துரை விலையை ஆலோசனை செய்யும் கூட்டத்தை அமைச்சர்கள், அதிகாரிகளுடன் நடத்தி கடந்த ஆண்டு நிர்ணயித்த விலையையே முதல்வர் அறிவித்துள்ளார்.

கரும்பு உற்பத்தி செலவு உயர்வு, பருவமழை பொய்த்துப் போவது, நிலத்தடி நீர் குறைந்து வருவது, பேரிடர்களால் ஏற்பட்ட மோசமான பாதிப்புகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கரும்பு விவசாயிகளின் எதிர்காலம் இன்றைக்கு நிலைகுலைந்து நிற்கிறது.

நிலுவைத் தொகையை வழங்கக் கோரி கரும்பு விவசாயிகள் நடத்திய ஆர்ப்பாட்டம், மத்திய அரசு நிர்ணயிக்கும் விலை உயரும்போதும், மாநில அரசின் ஊக்கத்தொகையை உயர்த்தாமல் இருப்பதும், அதை குறைத்துக் கொண்டே போவதும் கரும்பு விவசாயிகளின் நலன் மீதோ, அவர்களின் முன்னேற்றம் மீதோ அரசுக்கு அக்கறையில்லை என்பதையே காட்டுகிறது.

பொங்கல் பண்டிக்கைக்கு முன்பாகவே, கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.3,500 கொள்முதல் விலை வழங்கவும், தனியார் மற்றும் அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நிலுவையில் உள்ள தொகையை வழங்கவும் தமிழக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

கருகிய பயிரைக் கண்டு அதிர்ச்சி
மேலும் 3 டெல்டா விவசாயிகள் பலி

வேதாரண்யம், டிச. 29- காவிரி டெல்டா மாவட்டங்களில் சுமார் 10 லட்சம் ஏக்கரில் விவசாயிகள் சம்பா சாகுபடி செய்தனர். இதற்காக, மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால், தண்ணீர் பற்றாக்குறையால் அணை மூடப்பட்டது. இதனால் பயிர்கள் கருகியது.

பயிர்களை காப்பாற்ற பணம் கொடுத்து பம்ப்செட்களில் இருந்து தண்ணீர் வாங்கி பாய்ச்சினர். எதுவும் கைகொடுக்காததால் அதிர்ச்சியிலும் மாரடைப்பிலும் 48 விவசாயிகள் இறந்துள்ளனர். நேற்று (28.12.2016) மேலும் 3 விவசாயிகள் இறந்தனர். நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள வாய்மேடு என்ற கிராமத்தை சேர்ந்தவர் சுப்பிரமணியன் (வயது 72). இவர் தனக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தில் சம்பா சாகுபடி செய்திருந்தார். மழை இல்லாததால் பயிர்கள் கருகத் தொடங்கியது.

நேற்றுமுன்தினம் மாலை வயலுக்கு சென்ற இவர், தண்ணீர் இல்லாமல் கருகிய பயிரைப் பார்த்து அதிர்ச்சியடைந்து நெஞ்சுவலி ஏற்பட்டு வயலிலேயே சுருண்டு விழுந்து இறந்தார். இவருக்கு 2 மகன்களும், 3 மகள்களும் உள்ளனர்.

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை அடுத்த தில்லைவிளாகம் துரைத்தோப்பை சேர்ந்தவர் சண்முகம். இவரது மனைவி சந்திரா (வயது 61). இவர் 3 ஏக்கரில் சம்பா சாகுபடி செய்திருந்தார். தண்ணீர் பற்றாக் குறையால் நெற்பயிர்கள் கருகின. இதனால் கவலையிலிருந்த சந்திரா நேற்று காலை வயலுக்கு சென்றார். அங்கு கருகிய பயிர்களை பார்த்து விட்டு வேதனையுடன் வீடு திரும்பியவர், `கடன்பட்டு நட்ட பயிர்கள் கருகி போச்சே' என்று வேதனை தெரிவித்த வாறு அதிர்ச்சியில் மயங்கி விழுந்தார். வீட்டிலிருந்தவர்கள் பார்த்தபோது சந்திரா உயிரிழந்தது தெரியவந்தது.

இதுகுறித்து முத்துப்பேட்டை போலீசார் விசாரிக்கின்றனர். இதேபோல் புதுக்கோட்டை மாவட்டம் ஆனை வாரி கிராமத்தில் வீரய்யா(48) என்பவர் நேற்று முன்தினம் இரவு பயிர் கருகிய அதிர்ச்சியில் மாரடைப்பால் உயிரிழந்தார்.

விடுதலை, உண்மை, பெரியார் பிஞ்சு, The Modern Rationalist
சந்தாதாரர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு

'விடுதலை, உண்மை, பெரியார் பிஞ்சு, The Modern Rationalist – சந்தா முடியும் தறுவாயில் தங்களுக்கு அனுப்பப்படும் நினைவூட்டல் கடிதம் குறுஞ்செய்தி மூலம் (SMS) அனுப்பப்பட உள்ளதால், தங்களுடைய கைப்பேசி எண்ணை தங்கள் சந்தா எண்ணுடன் கீழ்க் காணும் எண்களில் ஏதேனும் ஒரு கைப்பேசி எண்ணுக்கு உடனடியாக தெரியப்படுத்தக் கேட்டுக் கொள்கிறோம்.

- 97109 44813
- 97109 44815
- 97109 44819
- 96005 57389

வீடு, கார் கடன்களை திருப்பி செலுத்த கால அவகாசம் 90 நாட்களாக நீட்டிப்பு

புதுடில்லி, டிச. 29- பழைய 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்றும் அதற்கு பதிலாக புதிய 500 மற்றும் 2000 ரூபாய் நோட்டுகள் வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி நவம்பர் 8ஆம் தேதி அதிரடியாக அறிவித்தார்.

இதனையடுத்து, தொடர்ச்சியாக மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் பல்வேறு அறிவிப்புகளை தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தது. இதுவரை சுமார் 50 அறிவிப்புகளுக்கு மேல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், வீடு, கார், விவசாயம் உள்ளிட்ட கடன்களை திருப்பி செலுத்துவதற்கான கால அவகாசம் 90 நாட்களாக நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

ஏற்கனவே இதற்கான கால அவகாசம் 60 நாட்களாக நீட்டிக்கப்படும் என்று கடந்த டிசம்பர் 5ஆம் தேதி அறிவிக்கப்பட்டு இருந்தது. சுமார் ஒரு கோடி ரூபாய் வரை இந்த அறிவிப்பு செல்லும். இந்த அறிவிப்பு வருகின்ற டிசம்பர் 31ஆம் தேதிக்குள் முடிவடைய உள்ள நிலையில் இந்தப் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்நிலையில், கடன்களை திருப்பி செலுத்துவதற்கான கால அவகாசம் மேலும் ஒரு மாத கால அவகாசம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்குறுதிகளை மோடி நிறைவேற்றவில்லை
கர்நாடக முதல்வர் சித்தராமையா குற்றச்சாட்டு

யஷ்வந்த்பூர், டிச. 29- மக்களவைத் தேர்தலின்போது பாஜக வெளியிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற பிரதமர் நரேந்திர மோடி தவறிவிட்டதாக கர்நாடக முதல்வர் சித்தராமையா குற்றஞ்சாட்டினார்.

பெங்களூரு யஷ்வந்த்பூரில் புதன்கிழமை காங்கிரஸ் கட்சியின் 132ஆவது ஆண்டு விழாவைத் தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

கருப்புப் பணம் மற்றும் ஊழலை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டு பண மதிப்பிழப்பு நடவடிக்கையை பிரதமர் மோடி எடுத்துள்ளார். கருப்புப் பணம் மற்றும் ஊழலை ஒழிக்க காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் எப்போதும் ஆதரவு தெரிவித்து வந்துள்ளன.

ஆனால், குஜராத் முதல்வராக இருந்தபோது பிரதமர் நரேந்திர மோடி, சஹாரா மற்றும் பிர்லா நிறுவனங்களிடம் இருந்து கையூட்டு பெற்றுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு குறித்த விசாரணைக்குத் தயாரா? மேலும், 2014ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலின்போது கோடிக் கணக்கான ரூபாயை செலவழித்து பாஜக பிரச்சாரம் செய்ததே, அந்த பணம் வெள்ளைப்

பணமா? கருப்புப் பணமா? என்பதை பிரதமர் மோடி விளக்க வேண்டும்.

மக்களவைத் தேர்தலின்போது அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பிரதமர் மோடி தோல்வி அடைந்துவிட்டார். வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை மீட்டு இந்திய மக்கள் ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் தலா ரூ.15 லட்சம் பற்று வைப்பதாகக் கூறிய மோடி, அதைச் செயல்படுத்தினாரா?

பண மதிப்பிழப்பு நடவடிக்கையை வரவேற்கும் காங்கிரஸ், அதற்கான முன்னேற்பாடுகளை முறையாகச் செய்யாதது ஏன்? என்றுதான் கேட்கிறோம். பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் நடுத்தர மற்றும் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வங்கியின் முன் வரிசையில் நின்ற போது 100க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இதற்கெல்லாம் யார் பொறுப்பு?

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு, முதலீட்டாளர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் சாதகமான செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

ஜவகஹர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடத்தியபோது, இந்தியா வேகமாக வளர்ச்சி அடைந்தது. காங்கிரஸ் கட்சியின் வரலாறு, இந்திய நாட்டின் வரலாறாகும். காங்கிரஸ் தலைவர்கள், இந்திய விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்தவர்கள்.

பாஜகவினர் யாராவது நாட்டு விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்களா? நாட்டின் ஒருமைப்பாட்டையும், நல்லிணக்கத்தையும் கட்டிக் காப்பதில் காங்கிரஸின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்றார். நிகழ்ச்சியில், காங்கிரஸ் மாநிலத் தலைவர் ஜி.பரமேஸ்வர், அமைச்சர்கள் கே.ஜே.ஜார்ஜ், எச்.ஆஞ்சநேயா, மகாதேவ பிரசாத் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கருப்புப் பணத்தை மோடியால் ஒழித்து விட முடியாது
வி.சி.க. தலைவர் திருமாவளவன் பேச்சு

புதுச்சேரி, டிச. 29- ரூபாய் நோட்டு பிரச்சினையில் பிரதமர் மோடி எடுத்து வரும் தற்போதைய நடவடிக்கைகளால் மட்டுமே கருப்பு பணத்தை ஒழித்து விட முடியாது என்று புதுச்சேரியில் நடந்த மாநில மாநாட்டில் திருமாவளவன் கூறினார்.

மத்திய அரசின் பொருளாதார நெருக்கடி நிலையை கண்டித்து புதுச்சேரி உப்பளம் துறைமுக மைதானத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் அரசியல் அமைப்பு சட்டப் பாதுகாப்பு மாநாடு நேற்று (28.12.2016) இரவு நடந்தது.

மாநாட்டிற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிறுவன தலைவர் திருமாவளவன் தலைமை தாங்கி மாநாட்டு மலரை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

பா.ஜ.க. அரசின் பொருளாதார நெருக்கடி நிலையை கண்டிக்கிற வகையில், இந்திய தேசத்திற்கு நேர்ந்துள்ள பேராபத்தில் இருந்து இந்திய தேசத்தை பாதுகாக்க வேண்டும். அதற்கு முன்நிபந்தனையாக இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் இந்திய அளவில் அனைத்து தரப்பு ஜனநாயக அமைப்புகளும் ஓர் அணியில் திரள அழைப்பு விடுக்கும் வகையில் இந்த மாநாட்டை நடத்துகிறோம்.

இந்த மாநாடு கடந்த 6ஆம் தேதி அம்பேத்கர் நினைவு நாள் தினத்தை நடைபெறும்

என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் புயல், மழை காரணமாக இந்த மாநாட்டை டிசம்பர் 28க்கு தள்ளி வைத்தோம். அதன் அடிப்படையில் தான் இந்த மாநாடு தற்போது நடக்கிறது.

மோடி அறிவித்து இருப்பது கருப்புப் பணத்தை ஒழிக்க, கள்ள நோட்டு பழக்கத்தை ஒழிக்க, பயங்கரவாத செயல்களை தடுக்க, ஊழலை ஒழிக்க என்று விளக்கம் அளித்துள்ளார். ஆனால் அதில் உண்மை இல்லை. அவரது நோக்கம் அதுவல்ல என்று சொல்வதற்கு தான் இந்த மாநாட்டை கூட்டியுள்ளோம்.

ரூபாய் நோட்டுகளை ஒழிப்பதாக அறிவிப்பதற்கு முன்பு இதுகுறித்து பிரதமர் நாடாளுமன்றத்தில் விவாதித்தாரா? அல்லது அமைச்சரவையில் விவாதித்தாரா? இல்லை. பிரதமர் நரேந்திர மோடியின் இந்த அறிவிப்பு முறை இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரானது.

பிரதமர் நரேந்திரமோடி தற்போது எடுத்து வரும் நடவடிக்கைகளால் மட்டுமே கருப்பு பணத்தை ஒழித்து விட முடியாது. ஏனென்றால் மத்திய அரசின் கொள்கை தவறான கொள்கை நோக்கம் தவறானது. இன்னும் 50 நாட்கள் ஆனாலும் கருப்புப் பணத்தை ஒழிக்க முடியாது.

இவ்வாறு திருமாவளவன் பேசினார்.

மாநாட்டில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநில செயலாளர் ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்மாநில செயலாளர் முத்தரசன், புதுவை மாநில செயலாளர் விசுவநாதன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் புதுவை மாநில முதன்மை செயலாளர் தேவ.பொழிலன் மற்றும் பலர் கலந்து கொண்டு பேசினர்.

நீதிபதிகளுக்கான உதவியாளர் தேர்வு தள்ளிவைப்பு

சென்னை, டிச. 29- உயர்நீதிமன்றப் பணிகளில் நீதிபதிகளுக்கான நேர்முக உதவியாளர் உள்ளிட்ட பதவியிடங்களுக்கான நேர்காணல் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றப் பணிகளில் நீதிபதிகளுக்கான நேர்முக உதவியாளர், பதிவாளர்களுக்கான நேர்முக உதவியாளர், துணைப் பதிவாளர்களுக்கான நேர்முக எழுத்தர் ஆகிய பதவிகளுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு நவம்பரில் தொடங்கி, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்தப்பட்டு டிசம்பர் 19இல் நிறைவடைந்தது.

இதையடுத்து, நேர்காணல் ஜனவரி 10 முதல் 12ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது நிர்வாகக் காரணங்களுக்காக தேர்வு தள்ளிவைக்கப்பட்டு உள்ளதாகவும், புதிய தேதியும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும் என தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) அறிவித்துள்ளது.

பாஜகவிடம் பெருமளவில் கருப்புப் பணம்: காங்கிரஸ் குற்றச்சாட்டு

டில்லி, டிச. 29- மத்தியில் ஆளுங்கட்சியாக இருக்கும் பாஜகவிடமும் ஒடிசாவில் ஆட்சியில் இருக்கும் பிஜு ஜனதா தளத்திடமும் பெருமளவில் கருப்புப் பணம் உள்ளது; இந்தப் பணம், வரவிருக்கும் ஊராட்சித் தேர்தலில் வாக்குகளைக் கவர்வதற்குப் பயன்படுத்தப்படவிருக்கிறது'' என்று காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் 132ஆவது ஆண்டு விழா, புவனேசுவரத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்ற கட்சியின் மாநில தலைவர் பிரசாத் ஹரிசந்தன், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அடுத்த ஆண்டு பிப்ரவரியில் நடைபெறவிருக்கும் 3 அடுக்கு ஊராட்சித் தேர்தலில் வாக்காளர்களுக்கு இந்த கருப்புப் பணத்தை விநியோகம் செய்ய பாஜகவும் பிஜு ஜனதா தளமும் திட்டமிட்டுள்ளன. இவர்களது திட்டத்தை வாக்காளர்கள் நன்கு அறிந்து வைத்துள்ள வாக்காளர்கள், தேர்தலில் சரியான பதிலடியைத் தருவர். காங்கிரசுக்கு பண பலம் இல்லை. திடமான உறுதியே அதற்கு இருக்கிறது. பாஜக, பிஜு ஜனதா தளம் இடையே காணப்படும் சகோதரப் பாசத்தை மக்கள் கண்டுகொண்டு விட்டனர் என்றார் ஹரி சந்தன்.

ஆங்கில நாளிதழுக்கான தடை நீக்கம்

ஜம்மு, டிச. 29- ஜம்முகாஷ்மீர் மாநிலம், காஷ்மீர் பள்ளத்தாக்கில் "காஷ்மீர் ரீடர்' என்ற ஆங்கில நாளிதழுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து, அந்த நாளிதழ் புதன்கிழமை வழக்கம்போல் வெளிவந்தது.

ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதி பர்ஹான் வானி கடந்த ஜூலை 8ஆம் தேதி பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு பள்ளத்தாக்குப் பகுதியில் அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக கூறி "காஷ்மீர் ரீடர்' நாளிதழுக்கு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது.

காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்து வெளிவரும் செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து காஷ்மீர் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் ஒன்றை புதிதாக தொடங்கினர். காஷ்மீர் ரீடருக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று அந்தச் சங்கம் கோரிக்கை விடுத்து வந்தது.

இந்நிலையில், அந்த நாளிதழுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை செவ்வாய்க்கிழமை விலக்கிக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து புதன்கிழமை வழக்கம் போல் அந்த இதழ் வெளியானது.

ஜேஎன்யு மாணவர் காணாமல் போனது குறித்து சிபிஅய் விசாரணை தேவை

டில்லி, டிச. 29- டில்லி ஜவகஹர்லால் நேரு பல்கலைக்கழக (ஜேஎன்யு) மாணவர் நஜீப் அகமது மாயமான விவகாரம் குறித்து சிபிஅய் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு உத்தரப் பிரதேசத்தில் உள்ள புகழ்பெற்ற அலிகர் பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பு மனு அனுப்பியுள்ளது.

டில்லி ஜவகஹர்லால் நேரு பல்கலைக்கழக விடுதியில், ஏபிவிபி மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் முதுகலை பட்டப்படிப்பு மாணவரான நஜீப் அகமதுக்கும் இடையே கடந்த அக்டோபர் மாதம் திடீர் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனிடையே, நஜீப் அகமது கடந்த அக்டோபர் மாதம் 15 ஆம் தேதிக்குப் பிறகு காணவில்லை.

இதுதொடர்பான புகாரின்பேரில், டில்லி காவல்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. மேலும், நஜீப் அகமது குறித்து தகவல் தெரிவிப்போருக்கு ரூ.10 லட்சம் சன்மானம் அளிக்கப்படும் எனவும் டில்லி காவல்துறை அறிவித்துள்ளது.

இந்நிலையில், அலிகார் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு சார்பில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அய்தராபாத் பல்கலைக்கழக மாணவர் ரோஹித் வேமூலாவின் தற்கொலைக்கு காரணமான அமைப்புகளே, மாணவர் நஜீப் அகமது மாயமான விவகாரத்தின் பின்னணியிலும் உள்ளனர். 74 நாள்களாகியும் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கும் நஜீப் அகமதுவை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடாமல், அவரது குடும்பத்தினரை காவல்துறையினர் கொடுமைப்படுத்துகின்றனர். இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை பாதுகாக்கும் செயலிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். எனவே, மாணவர் நஜீப் அகமது மாயமானது குறித்து சிபிஅய் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, மாணவர் நஜீப் அகமதுவை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி, அலிகர் பல்கலைக்கழக மாணவர் அமைப்பினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவையில் நடைபெறும் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தையொட்டி கோவை மாநகர் முழுவதும் எழுதப்பட்ட சுவரெழுத்து விளம்பரங்கள்

உலகச் செய்திகள்

ஏவுகணை பரிசோதனை

ஈரான் நாட்டின் பெர்சியன் வளைகுடா கடற்கரையில் புஷர் நகரில் நேற்று சக்தி வாய்ந்த ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது.

உலகின் நீளமான புல்லட் ரயில் வழித்தடம்: சீனாவில் தொடக்கம்

பீஜிங், டிச.29 சீனாவில் உலகிலேயே நீளமான புல்லட் ரயில் வழித்தடம் (2,252 கி.மீ.) புதன்கிழமை செயல்பாட்டுக்கு வந்தது.

சீனாவில் வளமிக்க கிழக்கு கடற்கரைப் பகுதியிலுள்ள ஷாங்காய், வளர்ச்சி குறைந்த தென்மேற்குப் பகுதியிலுள்ள கன்மிங் ஆகிய நகரங்களை இணைக்கும் 2,252 கி.மீ. தொலைவு கொண்ட இந்த வழித்தடம், ஷிஜியாங், ஜியாங்ஷி, ஹுனான், குவாங்ஷு, யுனான் ஆகிய 5 மாகாணங்கள் வழியாகச் செல்கிறது. இந்த வழித்தடத்தில் மணிக்கு 330 கி.மீ. வேகத்தில் ரயில்கள் இயக்கப்படும்.

இதனால், ஷாங்காய் கன்மிங் இடையிலான பயண நேரம் 34 மணி நேரம் என்பதில் இருந்து 11 மணி நேரமாக குறையும்.

ஏற்கெனவே பெய்ஜிங் குவாங்ஷு இடையே 2,298 கி.மீ. தொலைவு கொண்ட வழித்தடம், கடந்த 2012ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு வந்தது.

சீனாவில் சுமார் 20,000 கி.மீ. தொலைவுக்கு அதிவேக ரயில் களுக்கான வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் 45,000 கி.மீ. தொலைவுக்கு இந்த வழித்தடம் நீட்டிக்கப்படும் என்று சீன ரயில்வே நிறுவனம் தெரிவித்துள்ளது.

சிரியா முழுவதும் போர் நிறுத்தம் கொண்டுவர ரஷ்யா, துருக்கி ஒப்புதல்?

சிரியா, டிச.29 சிரியா முழுமைக்கும் போர் நிறுத்தம் கொண்டு வருவதற்கு, ரஷ்யாவும், துருக்கியும் ஒப்புக் கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

சிரியாவில் அதிபர் அல் ஆஸாதுக்கு எதிராக நடைபெற்று வரும் உள்நாட்டு போரில், ரஷியாவும், துருக்கியும் எதிரெதிர் நிலைபாட்டில் உள்ளன.

ஆஸாதை பதவி நீக்க வேண்டும் என துருக்கி வலியுறுத்தி வரும் நிலையில், அவருக்கு ஆதரவான நிலைபாட்டில் ரஷ்யா உள்ளது.

இதனிடையே, கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்த அலெப்போ நகரின் அனைத்து பகுதிகளையும், ரஷ்ய ராணுவ உதவியுடன் சிரிய படைகள் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தன. முன்னதாக, அலெப்போ நகரில் இருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு வசதியாக, துருக்கி மற்றும் ரஷ்யாவின் உதவியுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் இம்மாத தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், சிரியா முழுமைக்கும் போர் நிறுத்தம் கொண்டு வருவதற்கு, ரஷ்யாவும், துருக்கியும் ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிகிறது. இதுதொடர்பாக, ரஷ்யா, துருக்கி, சிரிய கிளர்ச்சியாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையேயான பேச்சுவார்த்தைகள், துருக்கியின் அங்காரா நகரில் நடைபெற்ற தாகவும், புதன்கிழமை நள்ளிரவு முதல் போர் நிறுத்தத்தை அமல்படுத்துவதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் துருக்கி ஊடகங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன.

சிரியா முழுவதும் போர் நிறுத்தம் அமல்படுத்தப்பட்டால், அது அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக அமையும் என்று கூறப்படுகிறது.

அதிக தெளிவான நிழற்படங்களை எடுக்க 2 செயற்கைக் கோள்களை அனுப்பியது சீனா

பீஜிங், டிச.29 அதிக தெளிவான நிழற்படங்களை எடுக்க உதவும் 2 தொலை உணர்வு செயற்கைக் கோள்களை சீனா புதன்கிழமை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

இதுகுறித்து சீன அரசு செய்தி நிறுவனமான ஸின்ஹுவா புதன்கிழமை வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

ஷான்ஸி மாகாணத்தில் உள்ள டையூவான் செயற்கைக் கோள் செலுத்தும் மய்யத்திலிருந்து புதன்கிழமை காலை 11.23 (பெய்ஜிங் நேரப்படி) மணிக்கு "லாங் மார்ச் 2டி' ஏவுகணை மூலம் 2 தொலை உணர்வு செயற்கைக் கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டன.

இந்தச் செயற்கைக்கோள்கள் அதிக தெளிவான (0.5 மீட்டர் தெளிவில்) நிழற்படங்களை விண்ணிலிருந்து எடுத்து அனுப்பும் திறன் வாய்ந்தது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சீன அரசு செவ்வாய்க்கிழமை வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், "உலகத்தில் ஓரிடத்தை துல்லியமாக வானில் இருந்து அறிய உதவும் 35 செயற்கைக் கோள்களை 2020ஆம் ஆண்டுக்குள் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் விபத்துக்கான காரணம் தெரியவரும் என்று ரஷ்ய பாதுகாப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

நிலவில் ஆய்வு மேற்கொள்ள லூனார் ப்ரோப் கருவியை 2018ஆம் ஆண்டு சீனா செலுத்தும். இதைத் தவிர, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவது, நிரந்தர விண்வெளி மையம் அமைப்பது, செவ்வாய் கிரகத்தை அடைவது போன்ற திட்டங்களும் உள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தித் துளிகள்

பேருந்து மீது ரயில் மோதி 5 பேர் சாவு

துனிஸ், டிச.29 துனிசியாவில் அரசு பேருந்து மீது ரயில் மோதிய விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்; 52 பேர் படுகாயமடைந்தனர்.

துனிசியத் தலைநகர் துனிஸ் அருகே புதன்கிழமை காலை ரயில்வே கடவுப் பாதையை கடக்க முயன்ற அரசு பேருந்து, திடீரென பழுதாகி தண்டவாளத்தில் நின்றுவிட்டது.

அப்போது, அந்த வழியாக வேகமாக வந்த ரயில், பேருந்து மீது மோதியது. இதில், பேருந்து இரண்டாக உடைந்து நொறுங்கியது. இந்த கோர விபத்தில், பேருந்தில் இருந்த ஒரு குழந்தை உள்பட 5 பேர், சம்பவ இடத்திலேயே இறந்தனர்.

மேலும், 52 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு, துனிஸ் நகரிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த விபத்துக்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்ய விமானத்தின் மற்றொரு கருப்புப் பெட்டியும் மீட்பு

சோச்சி, டிச.29 கருங்கடலில் விழுந்து விபத்துக்குள்ளான ரஷ்ய ராணுவ விமானத்தின் மற்றுமொரு கருப்புப் பெட்டி புதன்கிழமை மீட்கப்பட்டது.

ரஷ்யாவின் சோச்சி நகரில் இருந்து சிரியாவுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டுச் சென்ற டியு 150 ரக ராணுவ விமானம், கருங்கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. சிரியாவில் முகாமிட்டுள்ள ரஷ்ய ராணுவத்தினரின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்துக்காக, ராணுவ கலைக் குழுவினருடன் பயணித்த அந்த விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளானது. இதில், விமானத்தில் பயணித்த 92 பேரும் உயிரிழந்தனர்.

இதுவரை 17 பேரின் சடலங்களும், 223 உடல் பாகங்களும் கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக ரஷ்ய பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே, விமானத்தின் முதல் கருப்புப் பெட்டி, கடலுக்கடியில் இருந்து செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டது. அதில் பதிவாகியுள்ள தகவல்களை, நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், விமானத்தின் 2ஆவது கருப்புப் பெட்டி புதன்கிழமை மீட்கப்பட்டது. இதிலுள்ள தகவல்களும் ஆராயப்பட விருக்கின்றன. இதன்மூலம் விபத்துக்கான காரணம் தெரியவரும் என்று ரஷ்ய பாதுகாப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

வணிகச் செய்திகள்

ரூபாயின் மதிப்பு உயர்வு

இன்றைய வர்த்தகநேர துவக்கத்தில் அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 8 காசுகள் உயர்ந்து ரூ.68.16 காசுகளாக உள்ளது.

வங்கிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே அமெரிக்க டாலரின் தேவை சரிந்துள்ளது, உலகளவில் மற்ற நாணயங்களுக்கு எதிரான டாலரின் பலவீனம் மற்றும் உள்நாட்டு பங்குச்சந்தையில் காணப்படும் உயர்வு போன்ற காரணங்களால் இந்திய ரூபாயின் மதிப்பில் உயர்வு காணப்படுவதாக அந்நிய செலாவணி விநியோகஸ்தர் தெரிவித்துள்ளார்.

கடந்த வர்த்தகத்தில் டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 18 காசுகள் குறைந்து ரூ.68.24 காசுகளாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

அந்நிய செலாவணி

	விற்பனை விலை ரூபாயில்
அமெரிக்க டாலர்	68.14
யூரோ	71.24
பவுண்ட் ஸ்டெர்லிங்	83.45
ஜப்பான் யென்	0.58
சிங்கப்பூர் டாலர்	46.98
மலேசிய ரிங்கட்	15.19
குவைத் தினார்	222.59
யுஏ.இ. திர்ஹாம்	18.55
பஹ்ரைன் தினார்	180.75
சவுதி ரியால்	18.15
ஓமன் ரியால்	176.97

தங்கம் - வெள்ளி

சென்னை

		தங்கம்	ரூபாய்
22 கேரட்	1 கிராம்		2696.00
24 கேரட்	10 கிராம்		28,684.49
வெள்ளி	1 கிராம்		42.5
	1 கிலோ		42,500.00

அலுவலகப் பயன்பாட்டுக்கான ஆடைகள் அறிமுகம்

ஆன்லைன் வர்த்தகத்தில் மிகச் சிறந்த நிறுவனமாகச் செயல்பட்டு வரும் அமேசான். காம்நிறுவனத்துடன், நவநாகரிக ஆடைகளை தயாரித்து வழங்கும் வேன் ஹுசென் நிறுவனம் கை கோர்த்துள்ளது.

அதாவது, இளைஞர்கள் குறிப்பாக பணிக்குச் செல்வோரின் தேவையைக் கருத்தில் கொண்டு அலுவலகப் பயன்பாட்டுக்கான (பார்மல்ஸ்) ஆடைகள் அமேசான் இணைய தளத்தில் விற்பனைக்கு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆன்லைன் விற்பனைத் தொடக்கத்துக்கு மை பர்ஸ்ட் பார்மல்ஸ் என பெயரிடப் பட்டுள்ளது. ஏராளமான வேலை வாய்ப்புகளுடன் புதிய உலகத்துக்குள் அறிமுகமாகி வரும் இளைஞர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில், வேன் ஹுசென் நிறுவனமானது அமேசான் இணையதளத்துடன் இணைந்துள்ளது.

amazon.in

இதுகுறித்து, அமேசான் பேஷன் இந்தியா நிறுவனத்தின் தலைவர் அருண் சர்தேஷ்முக் கூறியதாவது:

ஒவ்வொரு முறையும் எங்களது அமேசான் பேஷன் பகுதியை வாடிக்கையாளர்கள் பார்வையிடும் போதும்அவர்கள் தங்களுக்கு ஏற்ற பலவிதவிதமான ஆடைகளைத் தேர்ந்தெடுக்க முடிகிறது.

இந்தியாவில் எங்களது ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவையையும் நிறைவு செய்யும் வகையில், ஆடை வகைகளின் எண்ணிக்கையைஅதிகரிப்படுத்தி வருகிறோம்.

அதன்படி வாடிக்கையாளரின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இப்போது மைபர்ஸ்ட் பார்மல்ஸ் ஆனது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

கடன் தவணை செலுத்த கூடுதலாக 30 நாள் அவகாசம்

நாடு முழுவதும் பணப் பற்றாக்குறை நிலவி வருவதால், கடன் தவணையை செலுத்து வதற்கான அவகாசத்தை மேலும் 30 நாள்களுக்கு நீட்டிப்பதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

ஏற்கெனவே, இதற்காக 60 நாள்கள் அவகாசம் வழங்கப் பட்டிருந்த நிலையில், தற்போது அது 90 நாள்களாக நீட்டிக்கப்பட் டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம், வீட்டுக் கடன், வேளாண் கடன், கார் கடன் உள்ளிட்டவற்றுக்கான தவணை களை அபராதமின்றி ஜனவரி 31 வரை செலுத்துவதற்கு வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டதைத் தொடர்ந்து பணப் புழக்கம் குறைந்ததால், கடந்த நவம்பர் 1ஆம் தேதி முதல் டிசம்பர் 31வரை உள்ள கால கட்டத்தில் தவணை செலுத்த வேண்டியவர்களுக்கு ஏற்கெனவே 60 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

தனிநபர்களைத் தவிர, நடைமுறை மூலதனக் கணக்கின் கீழ் ரூ.1 கோடி வரை கடன் பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப் பட்டது. இந்த நிலையில், நாட்டில் பணப் புழக்கம் இன்னமும் சீரடையாததைக் கருத்தில் கொண்டு தவணை செலுத்துவதற்கான அவகாசம் மேலும் 30 நாள்களுக்கு நீட்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்கு சார்ந்த நிதி திட்டங்களில் புதிய முதலீட்டாளர்கள்

நடப்பு நிதி ஆண்டின் முதல் எட்டு மாத கால அளவில் புதிதாக 25.66 லட்சம் முதலீட் டாளர்கள் பங்கு சார்ந்த பரஸ்பர நிதி திட்டங்களில் இணைந்துள்ளனர்.

இதுகுறித்து செபி வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பங்கு சார்ந்த பரஸ்பர நிதி திட்டங்களில் சில்லரை முதலீட்டாளர்களின் பங்களிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனை எடுத்துக்காட்டும் விதமாக, நடப்பு 2016 - 2017ஆம் நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான கால அளவில் 25.66 லட்சம் புதிய முதலீட்டாளர்கள் பங்கு சார்ந்த திட்டங்களை தேர்ந்தெடுத்துள் ளனர்.

இதன் காரணமாக, கடந்த நிதி ஆண்டில் 36,025,062ஆக இருந்த பங்கு சார்ந்த பரஸ்பர நிதி முதலீட்டாளர் கணக்குகளின் எண்ணிக்கை நவம்பர் மாத இறுதியில் 38,591,768ஆக அதிகரித்தது.

இதையடுத்து, கடந்த மார்ச் மாத இறுதியில் ரூ.3.86 லட்சம் கோடியாக இருந்த பரஸ்பர நிதியங்கள் நிர்வகிக்கும் சொத்து மதிப்பு நவம்பர் மாத இறுதியில் ரூ.4.68 லட்சம் கோடியாக வளர்ச்சி கண்டது என செபி அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

விளையாட்டுச் செய்திகள்

மாநில அளவிலான டேக்வாண்டோ விளையாட்டுப் போட்டிகள்

திருப்பூர், டிச.28 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் திருப்பூர் ஜெய்வாபாய் பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் முதலமைச்சர் கோப்பை 2016-2017 மாநில அளவிலான டேக்வாண்டோ விளையாட்டுப் போட்டிகள் 27.12.2016 செவ்வாய்க்கிழமை காலை11 மணிக்கு தொடங்கி நடைபெற்றது.

இப்போட்டியை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் ஜெயந்தி அவர்களும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உமா அவர்களும் இணைந்து துவக்கி வைத்தனர்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முது நிலை மேலாளர் வால்வீம ராஜா அனைவரையும் வர வேற்றார்.

இப்போட்டி குறித்து தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திருப்பூர் பிரிவு சார்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார் பில் 32 மாவட்டங்களில் நடை பெற்ற டேக்வாண்டோ போட்டி

களில் வெற்றி பெற்ற 21 வயதுக்கு கீழ் உள்ள இருபால் மாணவர்கள் இம்மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்று 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

இப்போட்டிகள் வருகிற 29.12.2016 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. மாநில அளவிலான இப்போட்டியில்வெற்றி பெறுவோருக்கு முதல் பரிசு 1,00,000, இரண்டாம் பரிசு ரூ.75,000 மூன்றாம் பரிசுகள் முறையே இருவருக்கு ரூ. 50,000 என தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின் மண்டல முது நிலை மேலாளர் ராஜமகேந்திரன், திருப்பூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் நோயலின்ஜான், டேக்வாண்டோ சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.செல்வமணி, துணைத்தலைவர் சிறீதர்,திருப்பூர் மாவட்ட தலைவர் வி.வி.ராஜேந்திரன், செயலாளர் ஜெ.ஆபிரகாம் லிங்கன் உள்ளிட்ட பயிற்சியாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள், இதர விளையாட்டு மன்றங்களைச் சார்ந்த நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

மாவட்ட கைப்பந்துப் போட்டி: ஓட்டன்சத்திரம் அணி வாகையர் பட்டம் வென்றது

திண்டுக்கல், டிச. 29 திண்டுக்கல் மாவட்ட கைப்பந்து சங்கம் மற்றும் அச்யுதா கல்விக்குழுமம் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டி அச்யுதா பள்ளி உள்விளையாட்டு அரங்கத்தில் நடந்தது. இந்த போட்டியில் மாவட்டம் முழுவதும் இருந்து ஆண்கள் பிரிவில் 16 அணியும், மகளிர் பிரிவில் 4 அணிகளும் கலந்து கொண்டன.

இறுதிப்போட்டியின் முடிவில் ஆண்கள் பிரிவில் வாகையர் பட்டத்தை ஓட்டன்சத்திரம் சைலேந்திரா அணியும், 2ஆவது

இடத்தை காந்திகிராம பல்கலைக் கழக அணியும், 3ஆவது இடத்தை திண்டுக்கல் ஜி.டி.என். அணியும், 4ஆவது இடத்தை அச்யுதா பள்ளி அணியும் பெற்றன. அதேபோல மகளிர் பிரிவில் சின்னாளபட்டி தேவாங்கர் பள்ளி அணி வாகையர் பட்டத்தையும், 2ஆவது இடத்தை காந்திகிராம பல்கலைக் கழக அணியும், 3ஆவது இடத்தை பிரான்சிஸ் சேவியர் அணியும் பிடித்தன.

பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவுக்கு அச்யுதா கல்விக்குழும தாளாளர் புருஷோத்தமன் தலைமை தாங்கினார். உடற்கல்வி இயக்குனர் நாகராஜன் அனைவரையும் வரவேற்று பேசினார். சிறப்பு விருந்தினராக மாவட்ட கால்பந்து கழக செயலாளர் சண்முகம் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி பேசினார். நிகழ்ச்சியில் பள்ளியின் முதல்வர் சந்திரசேகரன் உள்பட ஏராளமான வர்கள் கலந்து கொண்டனர்.

ரத்தத்தை சுத்திகரிக்கும் காந்தம்!

நோயாளிக்கு தரும் ரத்தத்தில் கிருமித் தொற்று இருந்தால், அது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும். ரத்தத்தில் கலந்துவிட்ட பாக்டீரியாக்களை வேகமாக பிரித்தெடுப்பது, மருத்துவர்களுக்கு சவாலான வேலை.

இதை எளிதாக்க, காந்தத்தை பயன்படுத்தலாம் என, சுவிட்சர்லாந்திலுள்ள, 'எம்ப்பா' ஆய்வுக்கூடம், 'அடோல்பி மெர்க்கெல் இன்ஸ்டிடியூட்' மற்றும் அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகம் ஆகிய, மூன்று அமைப்புகளை சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

ரத்தத்தில் கலந்து நச்சு ஏற்படுத்தக்கூடிய பெரும்பாலான பாக்டீரியாக்களை எதிர்க்கும் பல்திறன், 'ஆன்டிபாக்டி'யை மருத்துவர்கள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர். அந்த ஆன்டிபாக்டியை மிக நுண்ணிய இரும்புத் துகள்களில் பூசி, அத்துகள்களை ரத்தத்தில் கலப்பர். அதன் பிறகு நோயாளியின் உடலிலிருந்து அந்த ரத்தத்தை சுத்திகரிக்கும், 'டயாலிசிஸ்' இயந்திரத்தில் கொடுத்து காந்தப் புலத்திற்கு உட்படுத்துவர்.

இதனால் ரத்தத்தில் உள்ள இரும்புத்துகள்கள் உடனடியாக தனிப்படுத்தப்பட்டு விடும். தனிப்படுத்தப்பட்ட துகள்களில் பூசப்பட்டுள்ள ஆன்டிபாக்டிகள், பாக்டீரியாக்களையும் கவர்ந்து வரும் என்பதால், ரத்தம் துய்மையானதாகி விடும். விலங்கு ரத்தத்தில் இந்த முறை வெற்றிகரமாக செயல்பட்டுள்ளது. எனவே, விரைவில் மனித ரத்தத்திலும் காந்த சுத்திகரிப்பு முறையை சோதிக்க ஹார்வர்டு மருத்துவர்கள் தயாராகி வருகின்றனர்.

சாயத்திலிருந்து சூரிய மின்சாரம்!

சூரிய ஒளி மின்சாரத்தை உற்பத்தி செய்ய, இப்போது பல புதிய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் மிக மலிவானது, வளைந்து கொடுக்கும் தன்மை உள்ளது; 'பெரோவ்ஸ்கைட்' என்ற பொருள் தான் என, விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அண்மையில் ஆஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள், பெரோவ்ஸ்கைட்டை பயன் படுத்தி உருவாக்கிய சூரிய ஒளி மின் அமைப்பு, மின் தயாரிப்பில் சாதனை படைத்துள்ளது. கால்சியம் டைட்டானேட் என்ற பொருளை அதிகம் கொண்ட மஞ்சள், பழுப்பு மற்றும் கறுப்பு நிறங்களில் கிடைக்கும் தாதுவைத்தான், பெரோவ்ஸ்கைட் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பெரோவ்ஸ்கைட் தகடுகள் மூலம் சூரிய ஒளியின் சக்தியிலிருந்து, 12.1 சதவீத மின்சாரத்தை உற்பத்தி செய்துள்ளனர். அதாவது வெறும், 16 சதுர செ.மீ., பரப்பளவுள்ள பெரோவ்ஸ்கைட் தகடு இதை சாதித்திருக்கிறது. இவர்கள் தயாரித்த பெரோவ்ஸ்கைட் கலவை, சுவற்றில் சாயம் போலவும் பூச முடிகிற அளவுக்கு வளைந்துகொடுக்கும் தன்மை கொண்டது என்பது குறிப்பிடத் தக்கது. பெரோவ்ஸ்கைட் தாதுக்களின் அமைப்பு நுண்ணிய மேடு பள்ளங்களைக் கொண்டவை. இதனால் அவற்றின் மேற்பரப்பளவு அதிகம். எனவே, அதிக சூரிய ஒளியை இவற்றால் உள்வாங்கி, மின்சாரமாக மாற்ற முடியும்.

சொன்னதைக் கேட்கும் ரோபோ கரம்!

பெரிய தொழிற்சாலைகளில் தான், ரோபோக்களை பயன்படுத்த முடியும் என்ற நிலையை மாற்ற, ஒரு சீன நிறுவனம் முன்வந்திருக்கிறது.

இந்நிறுவனம் உருவாக்கிய, 'டூபாட் எம்-1' என்ற ரோபோ கரம், சிறிய நிறுவனங்களில், திரும்பத் திரும்ப செய்ய வேண்டிய வேலைகளை, செம்மையாக செய்கிறது. டூபாட் ரோபோவை, விண்டோஸ், மேக் அல்லது லினக்ஸ் கணினிகள் மூலம் நிரல்களை எழுதி இயக்க முடியும்.

52 செ.மீ., உயரம் உள்ள இந்த ரோபோவால், 40 செ.மீ., துரம் வரை கையை நீட்ட முடியும். இந்த ரோபோவுக்கு, 1.5 கிலோ எடையுள்ள பொருட்களை துக்கும் பலம் உண்டு. திருகாணிகளை மாட்டி திருகுவது, பொருட்களை இடம் மாற்றி வைப்பது, வார்ப்பு மற்றும் வடிவமைப்பில் உதவுவது போன்ற வேலை களுக்கு நிரல்களை எழுதி பழக்கினால், டூபாட் அச்சு மாறாமல் அப்படியே திரும்பத் திரும்ப செய்யும். இதனால், சிறு பட்டறைகள் முதல் பொருட்களை கையாளும் சரக்கு கிடங்குகள் வரை இந்த ரோபோவை பயன்படுத்தலாம்.

லேசர் வெல்டிங் சாதனத்தை, டூபாட்டின் கரங்களில்

பொருத்தி விட்டால், துல்லியமாக வெல்டிங் செய்யவும் இது தயாராக இருக்கிறது.

டூபாட்டுடன் இணைக்கப்பட்டுள்ள கேமராவால், இந்த ரோபோ கையாளும் பொருட்களின் நிறம், அளவு போன்றவற்றை உணர முடியும். வரும், 2017 மே மாதம் விற்பனைக்கு வரவுள்ள டூபாட்டின் விலை, ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல்! தற்போது, கிக் ஸ்டார்ட்டர் தளத்தில் பலரது ஆதரவை பெற்றுள்ளது இந்த ரோபோ கரம்!

காசினியின் கடைசி பயணம்!

அமெரிக்க விண்வெளி அமைப்பான, 'நாசா' அனுப்பிய காசினி விண்கலம், சனி கிரகத்தை சுற்றியுள்ள வளையங்களை நெருங்கி அருமையான படங்களை எடுத்து அனுப்பியிருக்கிறது.

கடந்த சில வாரங்களாக, சனி கிரகத்தின் துருவங்களை படமெடுத்த காசினி, தன் பார்வையை சனி வளையங்களை நோக்கி திருப்பியது. இன்னும் சில வாரங்கள் அந்த விண்கலம், சனியின் பல வளையங்களை மிக அருகில் சென்று படம் பிடித்து அனுப்பும். இதுவரை பூமிக்கு இவ்வளவு தெளிவான, நெருக்கமான சனி வளையப் படங்களை எந்த விண்கலனும், தொலை நோக்கியும் படமெடுத்ததில்லை என, நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர். சனி கிரகத்தை விரிவாக ஆராய்ச்சி செய்வதற்காக, 1997இல் அனுப்பப்பட்ட காசினி விண்கலம், 18 ஆண்டுகள், 3 மாதங்களுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது.

அணு சக்தியால் இயங்கும் காசினி, சனி வளையங்களை மேலும் நெருக்கமாக கடந்து சென்று படங்களையும் தகவல்களையும் பூமிக்கு அனுப்பும். சனியை, சுற்றி



வரும், 'என்சிலாடஸ்' என்ற நிலாவையும், காசினி நெருக்கமாக ஆராய்ந்து படங்களை அனுப்பியுள்ளது. காசினி விண்கலத்தை, வரும், 2017 செப்டம்பர் 15 அன்று, சனி கிரகத்தின் மீது மோதி எரித்துவிட விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

காசினியின் மீது உயிரித் தொற்று ஏற்பட்டிருக் கலாம்என்பதால்தான் இந்த ஏற்பாடு என நாசா தெரிவித்துள்ளது.

இதயத்துக்கு ஒரு 'பிளாஸ்திரி'

மாரடைப்பு வந்தவர்களுக்கு, இதயத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதி காயமடைந்து, செயல்படாமலேயே இருக்கும். இதயத்தின் மற்ற பகுதி செயல்பட்டு, ஒரு பகுதி செயல்படாமல் இருப்பது, இதயத் துடிப்பின் லயத்தை பாதிப்பதோடு, காலப்போக்கில், 'அரித்மியா' போன்ற குறைபாடுகள் வரலாம்.

இதயத்தின் செயல்படாத பகுதியை செயல்பட வைக்க, இங்கிலாந்தின் இம்ப்பீரியல் கல்லூரி மற்றும் ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஒரு பிளாஸ்திரியை கண்டுபிடித்திருக்கின்றனர்.

கடல் வாழ் இறால் வகை ஒன்றின் ஓட்டிலிருந்து எடுக்கப்பட்ட, 'சிடோசான்', 'பாலிஅனிலின்' என்ற மின்சாரத்தை கடத்தும் திறனுள்ள பாலிமர் மற்றும் தாவரங்களிலிருந்து எடுக்கப்பட்ட, 'பைடிக்' அமிலம் ஆகிய பொருட்களை கலந்து, இந்த இதயத்திற்கான பிளாஸ்திரியை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கி இருக்கின்றனர். இதயம் துடிப்பது, இதயமே உற்பத்தி செய்யும் சிறிய அளவினாலான மின்சாரத்தால் தான்.

எனவே, இந்த பிளாஸ்திரியை இதயத்தின் பாதிக்கப்பட்ட இடத்தில் ஒட்டும்போது, மற்ற பகுதியிலிருந்து அப்பகுதிக்கும் மின்சாரம் கிடைத்து துடிப்பு உருவாகிறது. இந்த பிளாஸ்திரி இதயத்தின் தசைகளோடு கலந்துவிடாது என்றும், இதை தையல் போட்டு ஒட்ட வேண்டியதில்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதயத்தின் மீது பிளாஸ்திரியை வைத்து, பச்சை நிற லேசர் கதிர்கள் மூலம் லேசாக பொசுக்கினால் அது ஒட்டிக்கொள்ளும். எலிகள் மீது இந்த பிளாஸ்திரி வெற்றிகரமாக வேலை செய்வதாகவும், விரைவில் மனித இதயத்தின் மீது சோதனைகள் துவங்கவிருப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கண்டுபிடிப்பு, 'சயன்ஸ் அட்வான்சஸ்' இதழில் வெளியாகி உள்ளது.

வார்தா புயல் பாதிப்பு
மத்திய குழுவிடம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மனு

சென்னை, டிச.29 வார்தா புயல் பாதிப்பு குறித்து மத்திய குழுவிடம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மனு கொடுத்தனர்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் த.மோ.அன்பரசன், ஜெ. அன்பழகன், மா.சுப்பிரமணியன், சேகர்பாபு, ரங்கநாதன் உள்ளிட்ட 14 பேர் இன்று காலை தலைமைச் செயலகம் வந்தனர்.

மத்திய குழுவினரை சந்தித்து தங்களது தொகுதிகளில் ஏற்பட்ட புயல் பாதிப்புகள் குறித்து மனு கொடுத்தனர்.

பின்னர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட மத்திய குழுவினர் வருவதை அறிந்து அவர்களை தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தித்து தங்கள் தொகுதியில் ஏற்பட்ட பாதிப்புகளை எடுத்துக்கூற வாய்ப்பு ஏற்படுத்தி தரும்படி எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்து இருந்தார். அந்த கோரிக்கையை அரசு ஏற்கவில்லை.

மத்திய குழுவை வழி நடத்திச்செல்லும் அலுவலர்களை தொடர்பு கொண்டு கோரிக்கை மனு வழங்க நேரம் ஒதுக்கி தர கேட்டு இருந்தோம். 2 நாட்களாகியும் அரசின் சார்பில் எங்கள் கோரிக்கை பரிசீலிக்கப்பட வில்லை. இதனால் 14 சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று (28.12.2016) தலைமைச் செயலகத்துக்கு நேரடியாக வந்து மத்திய குழுவிடம் கோரிக்கை மனு கொடுத்தோம்.

மத்திய குழுவினர் முதல் அமைச்சரை சந்திக்கும் சமயத்தில் கோரிக்கை மனு கொடுக்கலாம் என்று முதல்அமைச்சர் அறைக்கு சென்றோம். ஆனால் எங்களுக்கு அங்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. முதல்அமைச்சரை மத்திய குழு வினர் சந்தித்த பிறகு அதிகாரி களுடன் ஆலோசனை நடத்தும் கூட்ட அரங்கில் சென்று சந்தித்து புயல் பாதிப்பு பற்றி மனு கொடுத்து இருக்கிறோம்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரத்தில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட மரங்களும், ஆயிரக் கணக்கான மின்கம்பங்களும் அடியோடு சாய்ந்து பாதிப்புக் குள்ளாகி உள்ளது.

நூற்றுக்கணக்கான மின் மாற்றிகள் உடைந்து பழுதாகி உள்ளது. வீட்டுக் கூரைகளும் சேதம் அடைந்துள்ளன. 3 மாவட்டங்களும் கடுமையாக பாதிக்கப் பட்டது.

எங்கள் தொகுதிகளில் உள்ள பாதிப்பை தனித்தனியாக கண்டறிந்து மனுவாக கொடுத்து இருக்கி றோம்.

அரசு கேட்டுக்கொண்டபடி ரூ.22,000 கோடியை மத்திய அரசு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

சரிகிறது மேட்டூர் அணை நீர்மட்டம்

மேட்டூர், டிச.29 பருவமழை பொய்த்ததாலும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்துக்கு உரிய காவிரி நீரை வழங்காத காரணத்தாலும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்த பட்ச அளவை நோக்கி சரிகிறது.

மேட்டூர் அணையில் 120 அடி வரை 93.47 டி.எம்.சி தண்ணீரைச் சேமிக்கலாம். ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி முதல் ஜனவரி 28ஆம் தேதி வரை காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும். முதன்முதலாக 1934ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. 12 காவிரி டெல்டா மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

மேட்டூர் அணை கட்டப்பட்ட பிறகு 1961ஆம் ஆண்டு அதிக பட்சமாக அணைக்கு வினாடிக்கு 3,01,052 கன அடி தண்ணீர் வந்தது. 1961ஆம் ஆண்டு அதிகபட்சமாக மேட்டூர் அணையிலிருந்து வினாடிக்கு 2,84,606 கன அடி தண்ணீர் உபரிநீராக வெளியேற்றப்பட்டது.

1961ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் தேதி மேட்டூர் அணையில் அதிகபட்சமாக 124.85 அடி தண்ணீர் தேக்கப்பட்டது. அப்போது அணையின் நீர் இருப்பு 100.742 டி.எம்.சியாக இருந்தது.

மேட்டூர் அணையில் உள்ள மீன்வளத்தைப் பாதுகாக்கவும், பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக் காகவும் அணையில் குறைந்த பட்சம் 9.6 டி.எம்.சி தண்ணீரை இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். 1946ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் தேதி மேட்டூர் அணையின் வரலாற்றில் மிகக் குறைந்த அளவாக அணையின் நீர்மட்டம் 6.40 அடியாக இருந்தது. அப்போது அணையில் 0.982 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே இருப்பு இருந்தது.

இந்த நிலையில், நிகழாண்டு தென்மேற்குப் பருவமழையும், வட கிழக்குப் பருவமழையும் கைகொடுக்காத காரணத்தாலும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின் படி கர்நாடகம் தமிழகத்துக்கு உரிய நீரை வழங்காத காரணத் தாலும், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு புதன்கிழமை காலை நொடிக்கு 102 கன அடி யாகச் சரிந்துள்ளது.

நிபந்தனைகள் தளர்த்தப்பட்டதால் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் அதிகரிப்பு

சென்னை, டிச.29 கடவுச்சீட்டு விண்ணப்பத்துக்கான நிபந் தனைகள் தளர்த்தப்பட்டுள்ளதால் சேவை மய்யங்களுக்கு வரும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மதுரை மண்டல கடவுச்சீட்டு அலுவலர் எஸ்.மணிஸ்வரராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர் களிடம் புதன்கிழமை அவர் கூறியதாவது:

கடவுச்சீட்டு விண்ணப்ப தாரர்கள் 1989ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதிக்குப் பிறகு பிறந்தவராக இருப்பின் பிறப்புச் சான்று கட்டாயம் என்பது தற்போது விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், விண்ணப்பத்துக் கான இணைப்புகளின் எண்ணிக் கையும் குறைக்கப்பட்டுள்ளது.

மத்திய வெளியுறவுத்துறை

அமைச்சகத்தின் புதிய விதிகளின் படி பிறப்புச் சான்று இல்லாத வர்கள், பிறந்ததேதி குறிப்பிடப் பட்ட பத்தாம் வகுப்பு மதிப் பெண் சான்று, மாற்றுச் சான்று, பான்கார்டு, ஆதார் கார்டு, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, ஆயுள் காப்பீட்டு பத்திரம் ஆகியவற் றைத் தாக்கல் செய்யலாம்.

திருமண, விவாகரத்து சான்று தேவையில்லை...:

ஒற்றை பெற்றோர் தங்களது குழந்தைகளுக்கு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும்போது தாய், தந்தை அல்லது காப்பாளர் என யாரேனும் ஒருவரது பெயரைக் குறிப்பிட்டால் போதும்.

திருமணமானவர்கள், விவாகரத்து பெற்றவர்கள் அதற் கான இணைப்புகளை தனித் தாளில் சுய சான்றொப்பத்துடன் அளித்தால் போதுமானது. ஆதர வற்ற குழந்தைகளுக்கு பிறந்த தேதிக்கான சான்று இல்லாதபட்சத் தில், தங்கியிருக் கும் இடத்தின் கடிதத்தைத் தாக்கல் செய்தால் போதுமானது. தத்தெடுத்த குழந் தைகளுக்கு சுயசான்று அளிக் கலாம்.

மேற்குறிப்பிட்ட சான்றுகள் இல்லாத காரணங்களால் ஏறத் தாழ 3 ஆயிரம் விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கின்றன. அந் தந்த விண்ணப்பதாரர்கள் புதிய விதிகளின்படி, அதற்குரிய ஆவணத்தைச் சமர்ப்பித்து பயன் பெறலாம்.

செய்தித் துளிகள்

மாணவர்களுக்கான பல்திறன் போட்டிகள்!

சென்னை, டிச.29 தமிழகத்தின் மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆரின் நூறாவது ஆண்டு (1917 - 2016) பிறந்த நாளை முன்னிட்டு, டாக்டர் எம்.ஜி.ஆர்.-ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வரும் ஜனவரி 11 அன்று பள்ளி கல்லூரி மாணவ - மாணவியருக்கான பல்திறன் போட்டிகளை நடத்த உள்ளது.

இதில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி போட்டிகள் இடம் பெறும். இடைநிலை (6-8 வகுப்பு), மேல்நிலை (9-12 வகுப்பு) மற்றும் கல்லூரி என மூன்று பிரிவுகளாக இப்போட்டிகள் நடத்தப்படும். கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் தமிழ் மொழியில், தமது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும்.

இப்போட்டியில் பங்கேற்பதற்கான விண்ணப்பப் படிவத்தை சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். - ஜானகி மகளிர் கல்லூரியில் (தொ.பே. 2493 7382 / 92) பெற்றுக் கொள்ளலாம்; அல்லது www.mgrjanaki.ac.in என்ற இணைய தளத்தில் இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி ஜனவரி 9 ஆகும். விண்ணப்பங்களை அனுப்ப இயலாதோர் நேரிலும் வந்து போட்டிகளில் கலந்து கொள்ளலாம். ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறுவோருக்கு முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகளும், இரண்டு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ்கள் உண்டு. போட்டியில் பங்கேற்பதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

2 ஆயிரம் ரூபாய் தாள்கள் அச்சடிக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது

சென்னை, டிச.29 தமிழகத்தில் 80 சதவீத எடிஎம் இயந்திரங்களில் 50 நாட்களுக்கு மேலாகியும் செயல்படவில்லை என வங்கி ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். நிலைமை சீரடைய இன்னும் 3 மாதங்களுக்கு மேலாகும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் இந்திய வங்கிய ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் தாமஸ் கூறுகையில், உயர் மதிப்புடைய ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறுவதற்கான அறிவிப்பு வெளியான நவம்பர் 8ஆம் தேதிக்கு பிறகு வருமான வரித் துறையினரால் நடத்தப்படும் வரும் சோதனையில் கோடிக்கணக்கான புதிய ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது. இந்த புதிய நோட்டுக்கள் எல்லாம் எந்த வங்கியில் இருந்து விநியோகம் செய்யப்பட்டது என்பதை ரிசர்வ் வங்கி பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும், நேற்றிலிருந்து ரிசர்வ் வங்கியில் இருந்து பொதுத்துறை வங்கிகளுக்கு பணம் அனுப்பவில்லை என்றும், பணம் அச்சடிக்கும் பணி தினமும் இரண்டு கால நேரங்களாக குறைக்கப் பட்டுள்ளதாகவும், புதிய 2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் அச்சடிக் கும் பணி நிறுத்தப்பட்டு விட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி வழிகாட்டுகிறது அய்யாவின் அடிச்சுவட்டில்... 5ஆம் பாகம் அறிமுகம்! 502 நூல்கள் பரப்பப்பட்டன!

தர்மபுரி, டிச.29 தமிழர் தலைவர் ஆசிரியரின் தன் வரலாற்று நூல் "அய்யாவின் அடிச் சுவட்டில்" ஏற்கனவே 4 பாகங்கள் நூல் வடிவம் பெற்று நாட்டில் பெரும் வர வேற்பை பெற்றுள்ளன. பல்லாயிரம் நூல்கள் வாசகர்களிடையே பெரும் தாக்கத் தை ஏற்படுத்தி உள்ளன.

மக்களால் போட்டி போட்டு வாங்கப்பட்டு அறிஞர் பெருமக்களின் அமோக ஆதரவைப் பெற்று விற்பனையில் சாதனை படைத் துள்ளன என்பதை நாம் அறிவோம். காரணம் ஆசிரியரின் தன் வரலாறு என்பது_தனி மனிதரின் அல்லது தனியொரு தலைவரின் வரலாறு அல்ல. இயக்கத்தின் வரலாறு, இனத்தின் வரலாறு, தமிழ் நாட்டின் வரலாறு, சமூகநீதியின் வரலாறு. தந்தை பெரியார் எனும் தத்துவப் பேரா சானின் வரலாற்றின் நீட்சி! தமிழ்ச் சமுதாயத்தின் மீட்சியும் கூட.

இந்தியத் துணைக்கண்டத்தின் பிற் படுத்தப்பட்ட மக்கள் பெற்ற இடஒதுக் கீட்டின் வரலாறு, தாழ்த்தப்பட்ட மக்களின் இடஒதுக்கீட்டில் ஏற்பட இருந்த பேராபத் தினை தடுத்தாட்கொண்ட வரலாறும் கூட!

அய்யாவின் அடிச்சுவட்டில்... நூலினை வாசிப்போர் வியக்கின்றனர். எத்தனை எதிர்ப்புகளை சந்திருக்கிறார்; தமிழினத்திற்கு, திராவிடர் இயக்கத்துக்கு ஏற்பட்ட சவால்களை சந்தித்து வெற்றி கண்டுள்ளார்; பெரியார் அறக்கட்டளையைக் கபளீகரம் செய்யத் துடித்த பார்ப்பனர் கொட்டத்தை ஒடுக்கி பாதுகாப்பைத் தந்துள்ளார்; சோதனையான காலகட்டத்தில் கழகத்தை காப்பாற்றி உள்ளார்; எத்தனை எத்தனை போராட்டங்கள் அவரால் நடத்தப்பெற்றுள்ளன; அவ்வளவு வாய்ப்பு களை, உரிமைகளைப் பெற்றுத் தந்துள்ள வரலாற்றின் வரலாறுதான் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணியின் வரலாறு என்பதை வரலாற்று நூல் பறைசாற்றுகிறது என்பதை எவரே மறுப்பர்!

அய்யாவின் அடிச்சுவட்டில்... 5ஆம் பாகம் தற்போது விற்பனையில்! திமுக பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் சென்னையில் நூலினை வெளியிட்டார். மாவட்ட வாரியாக அந்நூலின் அறிமுக நிகழ்ச்சிகளும், விற்பனையும் முன்னெ டுக்கப்படுகின்றன. பல்வேறு கட்சிகளின் நிர்வாகிகளும், அறிஞர் பெருமக்களும் அந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு நூலின் சிறப்புகளைப் பாராட்டி அதன் பெரு மையை கூறி வருகின்றனர்.

ரூ. 250 விலையுள்ள இந்நூலினை ஒவ்வொரு மாவட்டமும் 100, 50 என்ற எண்ணிக்கையில் வாங்கி அறிமுகம் செய்கின்ற நிலையில், திருச்சி மாவட்டம் 500 நூல்களைப் பெற்று விற்பனையில் சாதனை படைத்துள்ளது என்றால் 502 நூல்களை தருவித்து தர்மபுரி மாவட்டம் பெரும் சாதனையை படைத்துள்ளதை நேரில் கண்டு வியந்தோம்.

27.12.2016 அன்று தர்மபுரி பெரியார் மன்றத்தில் நூல் அறிமுக விழா நடை பெற்றது. அந்நிகழ்வில் கழகத்துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றனும், நானும் கலந்து கொண்டோம். மாவட்ட திமுக செயலாளர் தடங்கம் சுப்பிரமணி மற்றும் முன்னோடிகள் அரூர் ராசேந்திரன், பாலக் கோடு முருகன், காரிமங்கலம் பி.சி.ஆர். மனோகரன், பா.ம.க.முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் பாரிமோகன், மாவட்ட போக்குவரத்து அலுவலர் கே.வி.கே.சாமி, பி.எஸ்.என்.எல். துணை பொது மேலாளர் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

502 நூல்கள் விற்பனை செய்து தங்கள் மக்கள் தொடர்பை வெளிப்படுத்தினர். (1000 நூல்களாக இருந்தாலும் விற்பனை செய்திட முடியும் என்றனர்) பெரிய முயற்சி மேற்கொண்ட அமைப்புச்செயலா ளரும், மாவட்ட கழக மற்றும் பகுத்தறி வாளர் கழக நிர்வாகிகளின் செயல்பாடு பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஏற்கனவே தமிழர் தலைவரின் ஊர்தி நிதி வசூலில் சாதனை படைத்திட்ட மாவட்டம் தர்மபுரி. ஒகேனக்கல் பெரியாரியல் பயிற்சி முகாம் சிறப்பாக நடத்திட ஏற்பாடு களையும் சிறப்பாக செய்திட்ட பெரு மையை உரித்தாக்கி கொண்டு உள்ளனர். முற்றிலும் நூற்றுக்கும் மேற்பட்ட புதிய இளம் தோழர்கள் பயிற்சி முகாமில்!

தர்மபுரி வழிகாட்டுகிறது இயக்க செயல்பாடுகளில் என்பது மிகையான வார்த்தையல்ல. அரசு அலுவலர்கள், தோழமை கட்சி நிர்வாகிகள், அனைத்து நிலை சான்றோர்கள் என பெரிய அளவில் மக்கள் தொடர்பில் சரியாக இருப்பதே தர்மபுரி பெற்ற சிறப்புக்குக் காரணம். மேலும் கழக இந்நாள்-முன்னாள் நிர்வாகி களின் ஒருங்கிணைந்த செயல்பாடும் காரணம். எல்லாவற்றுக்கும் மேலாக "நம்மால் முடியும்" என்ற தன்னம்பிக்கை.

"நம்மால் முடியாதது வேறு எவராலும் முடியாது; வேறு எவராலும் முடியாதது நம்மால் மட்டுமே முடியும்" என்ற தமிழர் தலைவரின் நம்பிக்கை சொற்றொடர் தர்மபுரி மாவட்ட நிர்வாகிகளின் வழி காட்டு நெறிமுறை. தகடூர் மாவட்டம் வழிகாட்டுகிறது...! மற்ற மாவட்டங் களிலும் போட்டி போட்டு செயலாற்றிட முனைப்பு காட்டுவோமாக!

-துரை.சந்திரசேகரன்

ரூ.25 லட்சத்துக்கும் மேல் டெபாசிட் செய்தவர்கள் பட்டியலை வெளியிட வேண்டும்: ராகுல் வலியுறுத்தல்

புதுடில்லி, டிச.29 காங்கிரஸ் கட்சியின் 132ஆவது ஆண்டு விழா டில்லியில் நடந்தது.

இதில் பங்கேற்ற காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி ரூபாய் நோட்டு செல்லாத விவகாரம் குறித்து செய்தி யாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

உயர் மதிப்பிலான ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பால் நாடு முழுவதும் பணத்தட்டுப்பாடு நிலவுகிறது. பண மதிப்பு இழப்பால் ஏழை, நடுத்தர மக்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

இந்த அறிவிப்புக்கு பிறகு எத்தனை பேர் இறந்தனர் என்பதை அரசு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். எத்தனை பேருக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இழப்பீடு வழங்கவில்லை என்றால் ஏன் வழங்கப் படவில்லை என்பதற்கு பிரதமர் கண்டிப் பாக பதில் சொல்ல வேண்டும்.

மிக உயர்ந்த 1 சதவீத பணக்காரர் களுக்காக ரூபாய் நோட்டை பிரதமர் மோடி மதிப்பு இழக்க செய்துள்ளார். நாட்டில் உள்ள 50 குடும்பத்தினர் மட்டுமே இந்த அறிவிப்பால் பலன் அடைந்து உள்ளனர். மக்கள் பிரதமரிடம் கேள்வி கேட்கிறார்கள். ஆனால் பிரதமர் அவர் களுக்கு பதில் அளிக்க விரும்பவில்லை.

ரூபாய் நோட்டு செல்லாது என்ற அறிவிப்புக்கு முன்பு ரூ.25 லட்சத்துக்கு மேல் வங்கி கணக்கில் டெபாசிட் செய்தவர்கள் பற்றிய பட்டியலை மத்திய அரசு வெளியிட வேண்டும்.

ரூ.500, ரூ.1000 நோட்டு செல்லாது என்ற அறிவிப்பால் ஏராளமானவர்களுக்கு இழப்பு ஏற்பட்டு உள்ளது. அவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

பணம் எடுப்பதற்கு விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாட்டுகளை அரசு உடனடியாக நீக்க வேண்டும். மக்களின் நிதி சுதந்திரத்துக்கு விடுதலை அளிக்க வேண்டும்.

வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குடும் பத்தை சேர்ந்த ரூ.25 ஆயிரம் டெபாசிட் செய்துள்ள ஒவ்வொரு பெண்ணும் ரூபாய் நோட்டு விவகாரத்தால் பெரிதும் பாதிக்கப் பட்டு உள்ளனர்.

மோடியின் இந்த நடவடிக்கையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க பிரதமர் என்ன திட்டம் வைத்து இருக்கிறார் என்பதை கண்டிப்பாக விளக்க வேண்டும். விவசாயிகளுக்கான கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

ரூபாய் நோட்டு செல்லாது என்ற முடிவை அறிவிக்கும் முன்பு பிரதமர் எந்த நிபுணர்களிடம் கருத்துக்களை கேட்டார். அவர்களது பெயர் விவரத்தை தெரிவிக்க வேண்டும்.

பணமதிப்பை இழக்க செய்த முடிவு 50 நாட்களை நெருங்கி விட்டது. இதனால் முக்கிய கேள்விகளுக்கு பிரதமர் மோடி பதில் அளிப்பது அவசியமானது.

சுவிஸ் வங்கி கணக்கில் கருப்பு பணத்தை பதுக்கி வைத்து இருப்பவர்கள் விவரத்தை பிரதமர் மோடியும் அந்த நாட்டு கொடுத்து விட்டது.

இந்த பட்டி யலை பிரதமர் இன்னும் வெளியிடாமல் இருக்கிறார். பொது மக்களுக்கு தெரியும் வரையில் சுவிஸ் வங்கி கணக்கில் டெ பாசிட் செய்தவர்கள் பட்டியலை வெளியிட வேண்டும்.

இவ்வாறு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

பண மதிப்பு நீக்க நடவடிக்கையில் தடுமாறும் மத்திய அரசு ப.சிதம்பரம் குற்றச்சாட்டு

காரைக்குடி, டிச.29 பண மதிப்பு நீக்கத்தின் மூலம் போதிய புரிதல் இல்லாத, திட்டமிடுதல் இல்லாத முடிவுகளை எடுத்துவிட்டு மத்திய அரசு தடுமாறுகிறது என்று முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம் பரம் செய்தியாளர்களிடம் நேற்று (28.12.2016) கூறியதாவது:

தமிழகத்தை வறட்சி மாநி லமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். டிசம்பர் 12ஆம் தேதி வார்தா புயலால் இயற்கை பேரிடர் ஏற்பட்டது. ஆனால், அதற்கு பின் 15 நாட்களுக்குப் பிறகே மத்திய குழு அனுப்பப் பட்டுள்ளது. இத்தனை நாட் களாக மத்திய குழுவை ஏன் அனுப்பவில்லை என்ற கேள் விக்கு இதுவரை பதில் இல்லை.

பொதுவாக புயல் பாதிப்பு ஏற்பட்டவுடன் பிரதமர், நிதித் துறை செயலர் ஆகியோர் இடைக்கால நிவாரணமாக ரூ.500 கோடி, 1000 கோடி என அறி விப்பார்கள். பிறகு மத்திய குழுவின் அறிக்கை அடிப்படை யில் இறுதியாக ஒரு தொகையை அறிவிப் பார்கள். ஆனால், இது வரை மத்திய அரசு இடைக் கால நிவாரணம் வழங்கவில்லை. தமிழ்நாட்டை மத்திய அரசு வஞ்சிக்கிறது என குற்றம் சாட்டுகிறேன்.

பண மதிப்பு நீக்கத்தால் எந்தப் பயனும் கிடையாது. 15 லட்சத்து 44 ஆயிரம் கோடி மதிப்பிலான நோட்டுகள் பண மதிப்பு நீக்கம் செய்யப்படுவ தாக அறிவித்தார்கள். இதில் 5 லட்சம் கோடி ரிசர்வ் வங்கிக்கு திரும்ப வராது என்று கருதி னார்கள். இந்த 5 லட்சம் கோடி யும் கருப்பு பணம், அரசுக்கு லாபம் என அறிவித்துவிடலாம் என நினைத்திருந்தனர்.

மும்பையில் இருந்து எனது நண்பர் ஒருவர் நம்பத் தகுந்த செய்தியை சொல்லி யிருக்கிறார். நேற்று வரை 14 லட்சத்து 32 ஆயிரம் கோடி பணம் வங்கி களுக்கு வந்து விட்டது. இன் னும் எஞ்சியிருப்பது ஒரு லட்சம் கோடிதான். எனவே, என் கணிப்புப்படி இன்னும் மூன்று நாட்களில் 15 லட்சத்து 44 ஆயிரம் கோடி பணமும் வங்கிக்கு வந்துவிடும். பிறகு எதற்கு இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்கள்?

ரிசர்வ் வங்கி அச்சகங்கள், கருவூலங்கள், வங்கிக் கிளை கள் ஆகிய மூன்றிலிருந்துதான் புதிய ரூபாய் நோட்டுகள் கசிய வாய்ப்பு உள்ளது. இதில், தற் போது புதிய ரூபாய் நோட்டுகள் எங்கிருந்து கசிந்தது என்பதை மத்திய அரசு சொல்ல வேண்டும். ரிசர்வ் வங்கியில் இருந்து கசிந்திருந்தால் மத்திய அரசு நேரடி பொறுப் பேற்க வேண்டும்.

ஜெர்மனி, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலேயே 46இல் இருந்து 80 சதவீதம் வரை ரொக்கப் பரிவர்த்தனை உள்ளது. இந்தியாவில் மின்சாரம் இல்லாத, இணைய வசதியில் லாத ஏராளமான கிராமங்கள் உள்ளன. இந்நிலையில், காசில் லாத சமுதாயத்தை உருவாக்கு வோம் என் கிறார்கள். மின்னணு பணப் பரிமாற்றம் மூலம் மூன் றாவது நபர் லாபம் சம்பாதிப் பதற்கு மத்திய அரசு வழி வகுக்கிறது.

போதிய புரிதல் இல்லாத, திட்டமிடுதல் இல்லாத முடிவு களை எடுத்துவிட்டு மத்திய அரசு தடுமாறுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தமிழக சட்டப் பேரவை காங்கிரஸ் தலைவர் கே.ஆர். ராமசாமி, மாவட்ட தலை வர் சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

டில்லி துணை நிலை ஆளுநராக அனில் பைஜால் நியமனம்

புதுடில்லி, டிச.29 டில்லி மாநிலத்தின் துணை நிலை ஆளுநராக கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் பதவி வகித்து வந்த நஜீப் ஜங், கடந்த சில தினங்களுக்கு முன் தனது பதவியை விட்டு விலகுவதாக திடீரென அறி-வித்தார்.

டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு, நஜீப்புக்கு தொடர்ந்து முரண்பாடு நிலவி வந்த நிலையில் அவரது இந்த அறிவிப்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பான கடிதத்தை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கும் அவர் அனுப்பி வைத்தார். நஜீப் ஜங்கின் பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஏற்றுக்கொண்டார். இந்நிலையில், வாஜ்பாய் ஆட்சியின் போது மத்திய உள்துறை செயலாளராக பொறுப்பு வகித்த அனில் பைஜால்(70) டில்லி துணை நிலை ஆளுநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அனில் பைஜாலின் நியமனத்திற்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுவரை வழங்கப்பட்ட நிதி மொத்தம்	**ரூ. 27,82,011/-**
என்.விஜய் ஆனந்த் தாம்பரம்	500/-
தென் சென்னை மாவட்ட தலைவர் இரா.வில்வநாதன் மூலம்	6,000/-
ஜெ.ரமாபிரபா (மண்டல மகளிரணி செயலாளர், வடலூர்)	3,000/-
திருநாவுக்கரசு (ஈரோடு)	1,000/-
தாராபுரம் மாவட்ட தலைவர் கணியூர் கிருஷ்ணன் மூலம்	
உடுமலை	
க.காஞ்சிமலையன்	1,100/-
அ.ப.நடராசன்	1,000/-
வே.கலையரசன்	1,000/-
சு.தண்டபாணி கருஞ்சட்டை தமிழர் பேரவை	1,000/-
எம்.மத்தின்	1,000/-
ரவிச்சந்திரன்	500/-
பெரியார் பித்தன்	500/-
தாராபுரம்	
ச.ஆறுமுகம்	1,000/-
மா.தங்கவேல்	1,000/-
நா.செல்வராஜ்	1,000/-
த.முருகேசன்	1,000/-
க.அர்ச்சுணன்	500/-
கி.மயில்சாமி	1,000/-
நா.மாயவன்	1,000/-
நா.மனோகரன்	500/-
தாராபுரம் நகர கழக சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்குரைஞர் நா.சக்திவேல்	8,000/-
மொத்தம்	**ரூ. 28,13,611/-**

செய்தித் துளிகள்

மத்திய அரசின் அவசரச் சட்டத்துக்கு சீதாராம் யெச்சூரி கண்டனம்

புதுடில்லி, டிச.29 ரூ.500, ரூ.1,000 செல்லாத நோட்டுகளை அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்கு பிறகு வைத்திருந்தால் சிறை தண்டனை என்ற அவசர சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

இதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி கண்டனம் தெரிவித்து உள்ளார்.

இது குறித்து டில்லியில் அவர் செய்தியாளர்களிடம் கூறிய தாவது:-

ரூ.500, ரூ.1,000 நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பு மக்களுக்கு எதிரானது. இந்நிலையில் அந்த நோட்டுகளை குறிப்பிட்ட நாட்களுக்கு பிறகு வைத்திருந்தால் சிறை தண்டனை என்ற அவசர சட்டம் சட்டவிரோதமானது.

50 நாட்களில் இந்தப் பிரச்சினை சீராகும் என பிரதமர் மோடி தெரிவித்தார். ஆனால் மக்களுக்கு அவதி அதிகரித்து கொண்டு தான் இருக்கிறது. நாடாளுமன்றத்தில் இந்த சட்டத்தை நிறைவேற்ற பயந்து குறுக்கு வழியில் மத்திய அரசு தற்போது இதற்கு ஒப்புதல் வழங்கி உள்ளது.

டிசம்பர் 30ஆம் தேதிக்கு பிறகு புதிய அறிவிப்பை மத்திய அரசு வெளியிடலாம். அது எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரியவில்லை. இந்த பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து மத்திய அரசுக்கு எதிராக போராட முன்வரவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

"சார்க்" செயல்பாடுகளில் திருப்தி இல்லை

குடியரசு துணைத் தலைவர் கருத்து

மும்பை, டிச.29 பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய கூட்டமைப்பின் (சார்க்) செயல்பாடுகள் ஊக்கமளிக்கும் வகையில் இல்லை என்று குடியரசுத் துணை தலைவர் ஹமீது அன்சாரி தெரிவித்தார்.

முன்னாள் பத்திரிகையாளர் சுதீந்திர குர்கர்னி எழுதிய புத்தக வெளியீட்டு விழா, மும்பையில் புதன்கிழமை நடைபெற்றது. அப்புத்தகத்தை வெளியிட்ட பின், குடியரசுத் துணைத் தலைவர் ஹமீது அன்சாரி பேசியதாவது:

"சார்க்" கூட்டமைப்பின் செயல்பாடுகள், ஊக்கமளிக்கும் வகையில் இல்லை. இதனால், மாற்று வழிமுறைகள் குறித்து ஆராய வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதர பிராந்திய அமைப்புகளிடம் இருந்து நாம் பாடங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். புதிதாக உருவாகும் அமைப்பு, எந்த கட்டாயங்களுக்கும் உள்படாமல் தாமாக செயல்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

மனித குல பாதுகாப்பு பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் பிராந்திய ஒத்துழைப்பில் புதிய தொடக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கும், முரண்பாடுகளை தீர்ப்ப தற்கும் தேவையான அனைத்தையும் நமது நாடு மேற்கொண்டு வருகிறது. அதேவேளையில், குடிமக்களின் உரிமைகளையும், சுய கவுரவத்தையும் பாதுகாக்க வேண்டிய, உறுதி செய்ய வேண்டிய கடமையும் நாட்டுக்கு இருக்கிறது. குடிமக்களுக்குள் ஏதேனும் ஒரு பிரிவினர் ஒடுக்கப்பட்டால், அது ஒட்டுமொத்த நாட்டின் நலனுக்கு நல்லதல்ல.

நமது கலாச்சாரங்களையும், வரலாற்றுச் சிறப்புகளையும் இளம் தலைமுறையினருக்கு வழிவழியாகக் கொண்டு செல்ல வேண்டிய தேவையும் உள்ளது என்றார் ஹமீது அன்சாரி.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளர் **கி. வீரமணி** அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் கொண்டு 'விடுதலை' ஆஃப்செட் பிரின்டர்ஸ், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, சென்னை–600 007 – இல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. தொலைப்பேசி : 044-26618163 தொலைப்பதிவி (Fax) : 91-44-26618866, email: viduthalaimalar@gmail.com